விலை : 20.00
பக்கங்கள் : இருபது
09 MAR 2013
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லாண்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 25 சனிக்கிழமை (09.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

# வலம்புரி செய்தியாளர் மீது 6 பேர் கொண்ட குழு தாக்குதல்

## படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில்





(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் உதயராசா சாளின் (வயது-22) மீது இனம் தெரியாத, சுமார் 6 பேர் கொண்ட குழுவினர் வீதியில் வைத்து மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கும் 3.45 மணிக்கும் இடையில் மூன்று இடங்களில் வைத்து தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுப் கோபுர வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது பொருளியல் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த இனம்தெரியாத நபர்கள் இருவர் இடைமறித்து சாளினின் முகத்தில் குத்தியதோடு சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

இந்தத் (19ஆம் பக்கம் பார்க்க)

## தாக்கப்பட்ட செய்தியாளருக்கு நேற்றிரவு பொலிஸ் பாதுகாப்பு

இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட உதயராசா சாளினுக்கு வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொள்வதற்காகவைத்தியசாலைக்குச்சென்ற யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பாதுகாப்பை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

அத்துடன் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (எ-11)

# அமெரிக்க தீர்மான வரைபு உறுப்பு நாடுகள் பார்வைக்கு

## பலமான தீர்மானம் என விபரிப்பு

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா மன்ற மனித உரிமைகள் கவுன்சிலின் தற்போதைய அமர்வில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மான வரைபு உறுப்பு நாடுகளுக்கு பார்வைக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா ஆதரிக்கும்

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று டில்லியில் நடைபெற்ற டெசோ கருத்தரங்கில் உறுப்பினர்களிடம் தமிழக காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் குலாம் நபி ஆசாத் உறுதி கூறினார்.

தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்ராலின் தலைமையில் புதுடில்லியில் நேற்று நடைபெற்ற டெசோ கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன் மற்றும் கனி மொழி, கி.வீரமணி, சுப.வீரபாண்டியன், திருமாவளவன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழக காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் குலாம் நபி ஆசாத், தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், சுதர்சன நாச்சியப்பன், சித்தன் ஆகியோர் பங்கேற்றனர். (எ-11)

# இந்தியப் பிரதமருக்கு மன்னிப்புச் சபை மகஜர்



இலங்கை விவகாரம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்மென வலியுறுத்தி இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரி 14 இலட்சம் இந்தியர்கள் இந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

சர்வதேசமன்னிப்புச் சபையின் (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் தலைவர்களுடன் பேச இந்திய அரசு வலியுறுத்தல்

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித் துள்ளார்.

இந்திய பாராளுமன்றத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பதிலளித்துப் பேசியபோதே மன்மோகன் சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொதுமக்கள் படும் துயரம் குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். இலங்கைத் தமிழர் சுயமரியாதை, கௌரவத்துடன் வாழ்வதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இலங்கை அரசு தமிழர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இலங்கையில் தேசிய நல்லிணக்கம் ஏற்படாமல் இயல்பு நிலை திரும்ப வாய்ப்பில்லை.

தமிழ் மக்களின் (19ஆம் பக்கம் பார்க்க)

# இசைப்பிரியாவின் படுகொலை மன்னிக்க முடியாத குற்றம்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின்இயக்கத்தை சேர்ந்தவர் என்றாலும் இறுதிக்கட்ட யுத்தத் தின்போது இசைப்பிரியா என்ற பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்தமை மன்னிக்கமுடியாத குற்றமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேசமகளிர்தினமான நேற்று கருத்துத் தெரிவித்தபோதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தகாலப் (19ஆம் பக்கம் பார்க்க)

# 84 கோடி பணமும் 1,500 பவுண் நகையும் மோசடி செய்த தாயும் மகளும் கைது

## வெளிநாடு தப்ப இருந்தபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 84 கோடியே 50 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் ஆயிரத்து 500 பவுண் தங்க நகைகளையும் மோசடி செய்த தாயும் மகளும் புத்தளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த தாயும் மகளும் இந்தியாவுக்கு தப்பிச் செல்ல விருக்கையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதியும், தாயுமாக சேர்ந்து பல இடங்களினைச் சேர்ந்த நபர்களிடம் 84 கோடியே 50 இலட்சம் ரூபாய் பணமும், ஆயிரத்து 500 பவுண் தங்க நகைகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெடி விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் முகமாலைப் பகுதியில்இடம்பெற்றவெடிப்புச்சம்பவத்தில் நபரொருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 12.30 மணியளவில் முகமாலைப் பிரதேசத்தில்மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போதே இவ் வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மிதிவெடியகற்றும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் பணிபுரியும் எம்.லதன் என்ற பணியாளரே இவ் வாறுபடுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்அனுமதிக்கப்பட்டுள்ளார். படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி பகுதி யைச் சேர்ந்தவர்என பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி)





## நன்றி கலந்த பாராட்டுக்கள்

பல காலங்களாக மின்சாரம் அற்று இருந்த இருபாலை கிழக்கு மண்டாக்குளப்பதி மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கு மின்சார வசதிபெற ஆவன செய்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளருமாகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களிற்கும் முன்னின்று செயற்பட்டு மின்சாரத்தினை பெற்றுத் தந்த அமைச்சரின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளரும் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவருமான இ.ஐங்கரன் அவர்களிற்கும் மற்றும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்பு தலைவர் உதயன் தோழர் அவர்களிற்கும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல் தோழருக்கும் எமது நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவிப்பதோடு அவர்களின் பணி தொடர எல்லாம் வல்ல மனோன்மணி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.

மனோன்மணி அம்மன்
ஆலய பரிபாலன சபையினர்,
இருபாலை.

(2117)


# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் அச்சமான சூழலை ஏற்படுத்தும்!

## யாழ். ஊடக அமையம் கண்டனம்

(யாழ்ப்பாணம்) வலம்புரியின்அலுவல செய்தியாளர் உ.சாளின் மீதான தாக்குதலுக்கு யாழ். ஊடக அமையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு,

யாழ்.குடாநாட்டினில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் மீதும் மீண்டும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள்மோசமான சூழல் ஒன்றை ஏற்படுத்தலாம் என யாழ் ஊடக அமையம் எச்சரிக்கின்றது.

எல்லாமுமேஇயல்புக்குத் திரும்பிவிட்டதாக அரசு பறை சாற்றிக் கொண்டிருக்கையில் மற்றொரு ஊடகவியலாளர் மீது இடம்பெற்ற கொலைமுயற்சி ஏனைய ஊடக வியலாளர் களிடையே மிகவும் அச்சமான சூழல்ஒன்றைதோற்றுவித்துள்ளது.

வலம்புரி அலுவலகச் செய்தியாளரான உதயராசா சாளின் (வயது-22) நேற்று பிற்பகல் தாக்கப்பட்டமையை எமது அமைப்பு மிகவும் வன்மையாக கண்டிப்பதோடு வழமை போன்று இதனையும் இனம்தெரியாத நபர்களின் தாக்குதல் என ஒதுக்கித் தள்ளிவிடாது சட்டம் தம் கடமையினை சரிவர செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றது.

யுத்த சூழலினில் யாழ்ப்பாணத்தில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர் இன்னும் சிலர் காணாமல் போயிருந்தனர் இவர்களை கொன்றவர்களையோ அல்லது காணாமல் போகச் செய்தவர்களையோ இன்று வரை கண்டுகொள்ளவில் லையென்பது வருத்தம் தரும் உண்மை யாகும்.

அச்சமூட்டும் இத்தகைய நிகழ்வுகளின் தொடர்ச்சியாக பலர் நாட்டைவிட்டோ அல்லது ஊடகவியல் தொழிலை விட்டோ விலகி இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் யுத்தம் முடிந்துவிட்டதாகவும், நாட்டில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு விட்டதாகவும், அரசு அறிவித்திருந்தநிலையிலும்,யாழ்குடாநாட்டினில் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர் கள்மீதும் மேற்கொள்ளப்படும்தாக்குதல்சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன.

இத்தகையதொரு சூழலினிலேயே வலம்புரி அலுவலக செய்தியாளரான உதயராசா சாளின் தாக்கப்பட்டார்.

பக்கம் சாராத துடிப்பு மிக்க அவரது பணிகளினாலேயே யாழ். பல்கலைக் கழகத்தினில் மாணவர்கள் மீதான வன்முறைகள் பற்றிய பெருமளவினலான புகைப்படங்கள் வெளிவந்திருந்தன.

அதன் தொடர்ச்சியாக அன்றும் மிக மோசமாக தாக்கப்பட்டிருந்த அவர்அதற்கென சிகிச்சைபெற வேண்டியு மிருந்தது.

தொடர்ச்சியான அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல்களின் மத்தியினில் (நேற்று) அவர் மீது கொலை முயற்சி கட்டவிழ்த்துப் விடப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் சகித்துக் கொள்ளக்கூடியவையல்ல.

அவர் மீதான தாக்குதலினை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். குற்றவாளிகளை மக்கள் நன்கு தெரிந்து கொண்டே இருக்கின்ற நிலையில்வழமைபோன்றே குற்ற வாளிகளை தாம் தேடுவதாக கூறிக்கொண்டே இழுத்தடிப்பதை விடுத்து சூத்திர தாரிகளை கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்தி சட்டமொழுங்கு வெறும் வாய்ப்பேச்சினில்இல்லையென்பதை நிரூபிக்க நாம் அரசிற்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றுள்ளது. (எ-11)


## அகவை அறுபதில் வாழ்த்துகிறோம்
### சேவையால் உயர்ந்தீரே




01. சென் ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் சேவைக்காய்
பதினைந்தே வயததனில் தனை இணைத்திட்ட செல்வரஞ்சன்
அயராது தளராது ஆற்றிய பணியினால் மாவட்ட ஆணையாளராய்
பதவியுயர்வது ஆயிரத்து தொழாயிரத்துத் தொண்ணூற் றொன்றதனில் ஏற்று நின்றீர்
இலங்கை வங்கியின் உத்தியோகமதனில் உரிய வயதுவரை
பணிபுரியாது நீரும் சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்காய் ஓய்வு பெற்றீர்

02. செயல் வீரனாய் நீர் புரிந்த சேவையினால் அன்றோ
தேசிய தலைமையகத்தினர் மனமுவந்திரண்டு
அம்புலன்ஸ்களை வழங்கிடவே அவை
இருபத்து நான்கு மணிநேர சேவையில் ஈடுபட்டுப்
பல உயிர்களைக் காக்கின்றதன்றோ.

03. சுனாமியதனிற் பாதிப்புற்ற மக்களை நீர் காத்திடவே
சத்திர சிகிச்சை செய்தன்றைய தினமென்றொதுங்கவில்லை உம்கரங்கள்
இரண்டாயிரத்தாறுதனில் அல்லைப்பிட்டியதன்
அசம்பாவிதத்தில் அகப்பட்ட மக்களை மீட்டிடவே
உயிரை துச்சமெனக் கொண்டு நீரும்
அம்புலன்சுடன் அங்கு சென்றீரே

04. முதலுதவிப்பயிற்சியில் முப்பத்தைந்து ஆண்டு அனுபவமும் கொண்ட நீர்
எவர்க்கும் அஞ்சா நெஞ்சமுடன் தலைமையகத்துடன்
வாதாடிப் பெற்றீரே பயிற்சி நிலையமதை வேம்படியிலும்
வீட்டுத் தாதியர் பயிற்சி நெறியினை யாழ்.மாவட்டத்திற்கும்

05. சுயநலமிலாது செய்திட்ட சேவையினால்
உயர்ந்தீரே நீர் நீடு வாழ்க உம்முறவுகளுடன்
உம் சேவை வாழ்க எம் சென்ஜோன்
அம்புலன்ஸ் சேவையாளர் குழாமுடன்

(பி-2629)


## முல்லையில் இன்று மின்சாரம் தடைப்படும்

(முல்லாவி) மின்சார திருத்த வேலைகள் காரணமாகவும்வீதி அகலிப்புக் காரணமாகவும் இன்று சனிக் கிழமை முற்பகல்9மணிமுதல் நண்பகல் 12 மணி வரையும் முல்லைத் தீவுமாவட்டத்தின்மாங்குளம்,முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி உட்பட முல்லைத்தீவு பட்டின பிரதேசங்களில் மின் வெட்டுஅமுலில்இருக்கும் என முல்லை மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில் செல்வன் அறிவித்துள்ளார். (எ-5, 15)


### வீட்டுடன் காணி உடன் விற்பனைக்கு உண்டு

இல.47 புதிய சிவன் வீதி நல்லூரில் 1 1/4 பரப்பு காணியுடன் வீடு.உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
T.P-0758439057,0212219133 (2098)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற RMP or MD தேவை.
தொடர்பு:- 0779465467 (2078)

### கார் வாடகைக்கு

நீண்ட குறுகிய நாள் வாடகைக்கு சாரதியுடனோ அல்லது இல்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- 0779361427 (2119)




### பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
25% கழிவு
இன்றைய விசேட உணவு :-
தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

### புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

இல 77/A சம்பியன் வீதி கொக்குவிலில் அமைதியான சூழலில் நன்னீர் கிணறு சுற்றுமதிலுடன் கூடிய புத்தம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0772470590, 0778543106 (2109)

### பாரஊர்தி (லொறி) உடன் விற்பனைக்கு

ஆரியகுளத்தடி (குட்டிகராச்) பருத்தித்துறை வீதி. கராச்சில் மிகவும் நல்ல நிலையில் உள்ள 41 சிறி/27 சிறி Isuzu
LEYLAND HG XXXX
உடன் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:- 0774829542 , 0779722621 (2118)

# இன்று ஒரு தகவல்

## மரமும் மனிதனும்

ராஜா தன் பரிவாரங்களோடு ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அருகில் அமைச்சர்கள், அரண்மனை சேவகர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் "விர்" என்று வந்தது. அக் கல் நேராக ராஜாவின் நெற்றியிலே வந்து பட்டது. உடனே அவர் நெற்றியை பிடித்தவாறு அப்படியே அமர்ந்தார். அருகில் நின்றவர்கள் எல்லோரும் பதறிப் போனார்கள். ஒரு நாட்டின் ராஜா மீது கல் பட்டதென்றால் அது சும்மாவா?

"அக் கல் எங்கிருந்து வந்திருக்குமென எல்லோரும் நாலா புறமும் ஓடினார்கள். அமைச்சரும் ஒரு பக்கம் ஓடினார்.

அங்கே ஒரு சிறிய பையன் கையில் கல் வைத்திருந்தான்.

அமைச்சர் கோபமாக "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அவன் அதிர்ந்து போனான். மெதுவாக... வாயைத் திறந்து "மாங்கா...ய் அடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

அருகில் பார்த்தார்... ஒரு பெரிய மாமரம்! கீழே இரண்டு மாங்காய் இருந்தன. அவரும் புரிந்து கொண்டார். பையன் மாங்காய் அடிப்பதற்கு வீசிய கல்தான் தவறுதலாக மன்னர் நெற்றியிலே வந்து வீழ்ந்துள்ளது. இருந்தாலும் மன்னர் அல்லவா... சாதாரணமாக விட முடியுமா? பையனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து ராஜா முன் நிறுத்தினார்.

''மன்னா! இவன்தான் கல் வீசியவன்; இவனை சும்மா விடக்கூடாது; தண்டனை வழங்க வேண்டும்'' என்றனர் எல்லோரும்.

ராஜா சற்று நேரம் யோசித்து விட்டு, சொன்னார்; "விசாரிக்காமல் தண்டனை வழங்குவது மகா குற்றம்; நாளைக்கு அரண்மனையிலே விசாரணை செய்யலாம்" என்று கூறி விட்டு தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

மறுநாள், அரண்மனை மண்டபத்தில் அனைவரும் கூடினார்கள்.

அந்தச் சிறிய பையனை ராஜா முன் நிறுத்தினர்.

விசாரணை ஆரம்பமாகியது.

''ஏம்பா... நீ அந்தக் காட்டிலே தனியாக என்ன செய்து கொண்டிருந்தாய்?'' என்று ராஜா கேட்டார்.

''மாங்காய் அடித்துக் கொண்டிருந்தேன்'' என்று பையன் பதிலளித்தான்.

"எத்தனை மாங்காய் கிடைத்தது" என்றார்.

அவன் "இரண்டு" என்றான்.

"நீ வீசிய கல் மரத்திலே பட்டால், அதற்கு வலிக்குமென்பது உனக்குத் தெரியாதா?" என்றார்.

"தெரியாது" என்கிறான்.

''நீ வீசின கல் மனிதனுக்கு மேலே படுவது உனக்குத் தெரியாதா?"

"தெரியாது" என்றான்.

ராஜா யோசித்து விட்டு, அதன்பின் தீர்ப்பு சொன்னார்.

''உனக்கு தண்டனை கிடையாது! உன்னை விடுதலை செய்கிறேன்! சென்று வா மகனே" என்றார்.

அரண்மனையில் இருந்தவர்களுக்கு ஆச்சரியம்.

"என்ன இது... ராஜா இவ்வாறு கூறி விட்டாரே?'' இருந்தாலும் ராஜா தீர்ப்பு கூறியது கூறியது தானே!

எல்லோரும் சென்ற நிலையில் கடைசியாக அமைச்சர் மட்டும் அங்கே நின்று கொண்டிருந்தார்.

''என்ன அமைச்சரே! என்ன யோசனை?'' என்று ராஜா கேட்டார்.

அமைச்சர் மெதுவாக ''ம்... ஒன்றுமி...ல்லை... இந்தத் தீர்ப்பு..." என்று இழுத்தார்.

ராஜா சிரித்தவாறு, "அமைச்சரே! மரத்திற்கு அறிவு குறைவு. ஆனால், மனிதனுக்கோ ஆறறிவு என்று சொல்கிறார்கள். ஒரு மரம் தன் மேலே கல் எறிந்ததற்கு அச்சிறுவனுக்கு இரண்டு மாங்காயைப் பரிசாக வழங்கியுள்ளது.

ஒரு மனிதன் தன் மேலே கல் எறிந்த ஒரு சிறுவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களே... இது சரியா?'' என்று ராஜா கேட்டார். அமைச்சர் தலை குனிந்தார்.

"அறியாமல் செய்யும் குற்றத்தை மன்னிக்கும் மனோ பாவம் மனிதனுக்கு வேண்டும்" என்பதை வலியுறுத்தவே இக்கதை இங்கே கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தே.கை.ப அதிகாரசபையினால் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

இளைஞர்,யுவதிகளுக்கான புதிய பிரிவுகளுக்கான கற்கைநெறிகள் ஆரம்பவுள்ள நிலையில் இதற்கான விண்ணப்பங்கள் கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் கோரப்படுவதாக தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கிளி.மாவட்ட முகாமையாளர் ஏ.பி. அல்பிரட் தெரிவித்துள்ளார்.

இதன்படிதாதிஉதவியாளர், கணனி வன்பொருள் தொழில்நுட்பம்,, தட்டச்சு பொறிவலர் (தமிழ்)கணனி அனுமதிப்பத்திரகற்கை ஆகியகற்கை நெறிகளிற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறித்த கற்கை நெறிகளில் தாதி உதவியாளர் தட்டச்சு பொறிவலர் கணனி அனுமதி பத்திரகற்கை ஆகிய கற்கை நெறிகளை தொடருபவர்கள் க.பொ.த. சாதாணதர தகைமையையும் கணினி வன்பொருள் தொழில்நுட்பம் கற்கை நெறியினை பயில விரும்புபவர்கள் தரம் 10 கல்வித் தகைமையைபெற்றிருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமாவின் 3 வருட கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பௌதீகவியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடபெறவுள்ளது.

இந்நேர்முகத் தேர்விற்கு ஏற்கனவே இப்பாட நெறிக்காக விண்ணப்பித்தவர்களும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பட்டம் பெற்றவர்கள் அல்லது க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி பெற்றிருப்பதோடு க.பொ.த சாதரண தரத்தில் இருதடவைக்கு மேற்படாத அமர்வில் தாய்மொழி உட்பட 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி என்ற தகுதியுடைய ஏற்கனவே இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்காதவர்களும் இந் நேர்முகத் தேர்வில் பங்கு பற்ற முடியும் என இலங்கை நூலக சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மேலும் நேர்முகத் தேர்வுக்கு சமூகம் தருபவர்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்பத்தாட்சிப் பத்திரம், விவாகப் பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு), கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், சேவைக்கால சான்றிதழ் (பணிபுரிவோரிற்கு) ஆகியவற்றின் மூலச்சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் பிரதிகளை உடன் எடுத்து வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 220 |
| தக்காளி | 35 | 80 | 80-120 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 60 |
| கரட் | 120 | 90 | 160 | 140 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 40 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 75 | 60 | 80 | 120 |
| கறிமிளகாய் | 110 | 100 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | -- |
| போஞ்சி | 120 | 80 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 90 | 120 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 10-20 | .30 | 30 | 30 |
| தேசிக்காய் | 20-40 | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-55 | 50 | 45 | 45-50 |
| இராசவள்ளி | 90-120 | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 70-100 | 120 | 160 | 200 |

# இராசி பலன்

09.03.2013
(மாசி 25, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 4.11 மணிவரை
திருவோணம் பிற்பகல் 2.01 மணிவரை
இராகுகாலம் 9.23-10.53 மணிவரை
சுபநேரம் 3.23-4.53 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

**மேடம்**  புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்**  குடும்பத்தில் நிலவிவந்த சொல்யுத்தம் சுமுகமாக முடியும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**மிதுனம்**  அரசு சம்பந்தப்பட்ட வகையில் சில தாமதங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு.

**கடகம்**  சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், அபூர்வ சந்திப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிங்கம்**  சுவாரஸ்யமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் நன்மையுண்டு.

**கன்னி**  மனநிறைவு கூடும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு, தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், புத்திரர்களால் பெருமையுண்டு, பூர்வ புண்ணி காரியங்களில், ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்**  சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், ரோக பயமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்**  சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், உறவினர் உதவியுண்டு.

**தனுசு**  செய்தொழில் உயர்வும் மேன்மையும் ஏற்படும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, வாக்கு மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**மகரம்**  ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், குடும்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்**  சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்ய வேண்டி வரலாம், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மீனம்**  அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்.

வளவன்

# தகராறில் ஈடுபட்டவர் விளக்கமறியலில்

(மிருசுவில்)

உறவினர்கள் இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறினால் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, நபர் ஒருவர் உறவினரான பெண் ஒருவருக்கு பணத்தை கடனாக கொடுத்து பின் அப்பெண் பணத்தை திருப்பி கொடுக்காமையால் குறித்த நபர் பெண்ணை வீடு சென்று மிரட்டியுள்ளார்.

கடன் பெற்றவரின் மகன் தனது தாயை வீட்டிற்கு வந்து மிரட்டியவரிடம் வாளுடன் சென்ற வேளை இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டதுடன் கொடிகாமம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாமல் தடுத்ததுடன் வாளுடன் சென்ற நபரையும் கைது செய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளி எனக் கண்டு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-85)



நன்றி: ஜலண்ட்

# கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(பண்டத்தரிப்பு)

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கான இணைய வடிவமைப்பு (Web Designing) கணனி கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு சித்தன்கேணி விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறியை கற்க விரும்பும் மாணவர்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம உத்தியோகத்தரின் குணநல நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் என்பவற்றுடன் மேற்குறித்த திகதியில் வருகை தருமாறு சங்கானை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (அ-3-30)

* * *

(யாழ்ப்பாணம்)

மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானப் பட்டமாணிக்கான விண்ணப்பங்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கோரப்படுவதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டு வருவதோடு எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரையும் குறித்த விண்ணப்பப்படிவங்களை பிறவுண் வீதியிலமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் யாழ்.பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2-5)

* * *

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மருத்துவ பூச்சியியல் மற்றும் விஞ்ஞான முதுமாணிப் பட்ட நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் கடந்த 5 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருவதோடு எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை இப் பட்டமாணிக்குரிய சகல கல்விச் செயற்பாடுகளும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாத்திரமே நடைபெறும் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை நீரியல்வள அமைச்சே தடுக்கும்

## ஜனாதிபதி செயலகத்திலிருந்து பதில்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சே நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி செயலகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவிடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய ரோலர் படகுகளின் தொழில் நடவடிக்கையினைக் கட்டுபடுத்துமாறு கோரி ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்திற்கு ஜனாதிபதி செயலகத்தினாலும் பாதுகாப்பு செயலாளர் அலுவலகத்தினாலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என சமாசத்தின் தலைவர் அ. எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

மேலும் சமாசத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறல், தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் ஏற்படும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துமாறும் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கையினை மீனவர் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

(சித்தன்கேணி)

யாழ்.வட்டு இந்துக் கல்லூரியின் அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் சி.தனஞ்சயன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய நிர்வாக தெரிவு இடம்பெறவுள்ளமையால் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3-17)

# கன்பொல்லை கிராமத்திற்கு பொதுநூலகம் அமையுங்கள்

## மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலகத்தை சேர்ந்த கன்பொல்லை கிராமத்திற்கு நீண்ட வருடங்களாக பொதுநூலகம், பொது விளையாட்டு மைதானம் இன்மையால் அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

அக்கிராமத்தில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் அங்குள்ள படித்த இளைஞர், யுவதிகளின் கல்வி அறிவை மேம்படுத்த ஒரு நூலகம் இல்லாத நிலை காணப்படுகிறது.

அதேவேளை இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத்துறையை அதிகரிக்க அங்கு பொது விளையாட்டு மைதானம் இன்மையால் இளைஞர், யுவதிகளின் கால நேரங்கள் தேவையற்று வீணடிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இந்த இரு விடயங்கள் தொடர்பாக அப்பகுதி மக்கள் பலருடனும் பல தடவைகள் தொடர்பு கொண்ட போதிலும் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-10)

# காணி தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பறைச்சேரிவெளி காணி உரிமையாளர்களிற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பறைச்சேரிவெளி காணி உரிமையாளர்கள் அனைவரையும் சமுகம் தருமாறும் வருகை தருபவர்கள் நில அளவை வரைபடம் உள்ளிட்ட காணிகளுக்கான ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை போன்ற அத்தாட்சி ஆவணங்களை உடன் எடுத்து வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# தென்மராட்சி இலக்கிய அணியின் இலக்கிய நிகழ்வுகள் தொடர் 4

(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் இலக்கிய நிகழ்வு தொடர் 4 இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆற்றவுள்ளார். மேலும் கலைஞர் கௌரவிப்பில் சிந்தனை சிற்பி சி.கலாமோகன் கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்நிகழ்வில் அசதிக்கோவை எனும் நூல் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது. இதன் வெளியீட்டுரையை த.நாகேஸ்வரன் ஆற்றவுள்ளார்.

மேலும் வழக்காடு மன்றத்தில் கைகேயி, தசரதன், இராவணன் ஆகியோர் குற்றவாளிகளே என மூன்று பிரிவாக வாதாடப்படவுள்ளது.

இதில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் மற்றும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் நீதிபதியாக கடமையாற்றவுள்ளனர்.

க.ஈஸ்வரன், ச.மார்க்கண்டு, க.நடேஸ்வரன், வே.உதயகுமார், பா.விக்னேஸ்வரன், அ.வாசுதேவா ஆகியோர் வழக்காடு மன்றத்தில் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு பொதுமக்கள், மாணவர்கள், இலக்கிய ஆர்வலர்களை கலந்து பயன்பெறுமாறு அணியின் செயலாளர் அ.வாசுதேவா அறிவித்துள்ளார். (அ-3-29)

# நான்காவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய நான்காவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய இந்நிகழ்விலேயே பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

குறித்த பாடசாலை 2009 ஆம் ஆண்டு வரை 177 ஆண்டுகள் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயமாக செயற்பட்டு வந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆம் திகதி முதல் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் என பெயர் சூட்டப்பட்டு இன்றுடன் 4 ஆவது வருடத்தினை பூர்த்தி செய்கின்றது. (அ-5)

# காசோலை மோசடி தொடர்பில் அதிக முறைப்பாடு யாழ். மாவட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் ஏனைய மாவட்டங்களினை விட யாழ். மாவட்டத்தில் காசோலை மோசடி தொடர்பிலான முறைப்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றன. காசோலை மோசடி தொடர்பாக நேற்று முன்தினம் மட்டும் 40 முறைப்பாடுகள் யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன.**

இவற்றில் பொலிஸ் மதிப்பீட்டின் படி சுமார் 61 இலட்சத்து 66ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டு உள்ளது. இத்தொகை மேலும் பன்மடங்காக அதிகரித்து காணப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு என யாழ். மாவட்ட பிரதிப் பொலி ஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

அவரது பிரதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ். மாவட்டத் தில் அதிகரித்து வரும் காசோலை மோசடிகள் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் வேறு எந்த பிரதேசங்களிலும் நடைபெறாத வண்ணம் யாழ். மாவட்டத்தில் காசோலை மோசடிகள் அதிகரித்து காணப்படுகின்றன. இக்காசோலை மோசடிகள் பல வகைகளில் பல இடங்களில் இடம்பெற்று வருகிறன. குறிப்பாக வெளிநாடுகளிற்கு அனுப்புவதாக கூறியும் தங்க நகைகளினை கொள்வனவு செய்துவிட்டும் வர்த்தக நடவடிக்கைகளின் போதும் இக் காசோலை மோசடி இடம்பெற்று வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் கடந்த சில நாட்களிற்குள் பொலிஸ் நிலையங்களில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் கொக்குவில் பகுதியில் 4 இலட்சம் பெறுமதியான காசோலை மோசடியும், பிறவுண் வீதியில் 3 இலட்சத்து 88 ஆயிரத்து 440 ரூபா காசோலை மோசடியும், மானிப்பாய் வீதியில் 18 இலட்சம் ரூபா காசோலை மோசடியும், கலட்டி பிரதேசத்தில் 19 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா காசோலை மோசடியும், ஈச்ச மோட்டை பகுதியில் 9 இலட்சம் ரூபா காசோலை மோசடியும், சண்டிலிப்பாய் வடக்கில் 4 இலட்சத்து 88 ஆயிரம் ரூபா பண மோசடியும், அச்சுவேலி முருகன் கோவில் பகுதியில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடியும், இடம்பெற்று உள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று உள்ளன. எனினும் இம் முறைப்பாடுகள் அனைத்து முறைப்பாடுகளினையும் உள்ளடக்கப்பட்டு காணப்படவில்லை.

இவற்றினை விட இம் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகின்றன. யாழ் மாவட்டத்தில் அதிகரிக்கும் இக் காசோலை மோசடி முறைப்பாடுகளிற்கு காரணம் பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு இன்மையே ஆகும். எழுத்து மூலம் அல்லது ஆவணமூலம் எதுவுமின்றி பெருந்தொகையான பணத்தினை கொடுப்பதனால் மோசடி தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு சிக்கலாக உள்ளது. எனவே, இது விடயத்தில் பொது மக்கள் கூடுதல் கவனமெடுத்து செயற்பட வேண்டும். சட்டவிரோத வெளிநாட்டு முகவர்களினூடாக வெளிநாடு செல்வதனை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்வதோடு ஏனைய கொடு க்கல் வாங்கல்களிலும் மிக அவதானமாக செயற்பட வேண்டும். சட்டவிரோதமாக வெளிநாடு செல்பவர்கள் அல்லது வெளிநாட்டுக்கு அனுப்புவர்கள் மீது சிவில் வழக்கு தொடுக்கப்பட்டால் அவர்கள் தமது பணம் முழுவதினையும் இழக்க நேரிடுவதோடு தமது எதிர்காலத்தினையும் வீணடிக்க நேரிடும் என்றார் அவர். (அ-4)

# ஹலால் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் உலமாவிற்கில்லை

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவிற்கு ஹலால் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் கிடையாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

ஹலால் சான்றிதழ் பிரச்சினையால் சந்தையில் 20 வீதமான விற்பனை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறந்த விலங்குகள், இரத்தம், பன்றி இறைச்சி போன்றவற்றை உணவாக உட்கொள்ளக்கூடாது என்றே இஸ்லாமிய மதத்தின் புனித நூலான குர்ஆனில் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனைத் தவிர வேறும் எந்தவொரு உணவுப் பண்டங்களையும் இஸ்லாம் ஹறா மாக குறிப்பிடவில்லை.

எவ்வாறெனினும் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஹறாம் உணவுகளைக் கூட ஒருவர் உட்கொள்ள முடியும் என்றே குர்ஆன் தெரிவிப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஹலால் சான்றிதழை வழங்குவதற்கான எந்தவொரு சட்ட ரீதியான உரிமையும் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவிற்கு கிடையாது என்றார். (அ-2)


ஸ்ரீ சீரடி சாயி பாபாவின்
9ஆவது ராஜ பவனி
(10.03.2013)



அன்பான பக்தர்களே!
மஹா சிவராத்திரிப் பூசைகள்யாவும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி மறு நாள் காலை (11.03.2013) 5 மணிவரை வெகு சிறப்பாக இடம்பெறும்.
லிங்கோத்பவ காலத்தின்போது பக்தர்கள் சிவலிங்கப் பெருமானுக்கும் பாபாவுக்கும் அபிஷேகம் செய்யலாம்

பாபாவின் ராஜபவனி செல்லும் பாதை
இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று 8.30 மணிக்கு ஆலயத்திலிருந்து பவனி ஆரம்பமாகி நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் வீதி, கோயில் வீதி, செட்டித்தெரு ஒழுங்கை, செட்டித்தெரு, பருத்தித்துறை வீதி, குமார வீதி, கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி ஊடாக மீண்டும் இரவு 11 மணிக்கு ஆலயத்தை வந்தடையும்.

பிரதம குரு: சிவஸ்ரீ தானு வாசுதேவக் குருக்கள்
அனைவரும் வருக பாபா அருள் பெற

சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி, நல்லூர்.
தொ.பே: 0777222568, 021 321 1605
ஆலயத்தினரும், அடியார்களும்.
(2063)



உ
முருகன் துணை

வாழ்த்தி வரவேற்கின்றோம்

எதிர்வரும் 10.03.2013 ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கோயிற்கடவை சித்தி விநாயகர் ஆலய 8 ஆம் திருவிழா (இரவு சிவராத்திரி) அன்று கம்பவாரிதி **இ.ஜெயராஜ்** அவர்களின் தலைமையில் அவரது குழுவினருடன் இலக்கிய ஆணைக்குழு என்னும் இயல்துறை நிகழ்வு நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம். இந் நிகழ்வு சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



வடமராட்சி இயல்துறை ஆர்வலர்கள்



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உய்ரம்: 5'11"<br>கி.பா: 77, 8 இல் செவ். •<br>தகைமை/தொழில்: A/L, (கடை)<br>தொ.இ: B -1387 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 13.75<br>தகைமை/ தொழில்: BA Dip in Edu (புவியியல் ஆசிரியை)<br>தொ.இ: G -1393 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 10.5<br>தகைமை/தொழில்: A/L, (நகைக்கடை)<br>தொ.இ: B -1389 | பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: CIMA, MBA<br>தொ.இ: G-1394 |
| பிறப்பு: 1985 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: பூரம<br>கி.பா.:- 16<br>தகைமை/ தொழில்: A/L, (கட்டடத்துறை) UK Student Visa)<br>தொ.இ: B -1390 | பிறப்பு: 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'2"<br>கி.பா:48.5<br>தகைமை/ தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியை<br>தொ.இ: G -1397 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 8 இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc MSc (Computer Eng.), (Londan Student To visa<br>தொ.இ: B -1392 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்:- 5'3"<br>தகைமை/ தொழில்: BSc, Studying<br>தொ.இ: G -1377 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# உண்ணாவிரத குழப்பம் தொடர்பில் விரைவில் விசாரணை அறிக்கை

## பொலிஸார் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உண்ணாவிரதப் போராட்டத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களினை பொலிஸ் அதிகாரிகள் ஏற்றுக் கொண்ட அதேவேளை உண்மை வெளிப்பட்டதன் பிற்பாடு புதுக்கதையும் புனைந்துள்ளனர்.

கடந்த மாதம் 15 ஆம் திகதியன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றலில் படையினரின் காணி அபகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இடம்பெயர் மக்களின் மீள் குடியேற்றத்தினை வலியுறுத்தியும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இருநபர்கள் போராட்டத்தினை குழப்புவதற்கு முயற்சி மேற்கொண்டதோடு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசனும் ஊடகவியாளர்களும் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டிருந்தனர். இங்கு நடைபெற்ற அசம்பாவிதங்களினை யாழில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளும் இணையங்களும் புகைப்படங்களுடன் ஆதாரமாக செய்திகள் வெளியிட்டிருந்தன.

எனினும் இவற்றினை புகைப்பட புனைவுகள் என இராணுவமும் பொலிஸாரும் விசாரணை இன்றி எடுத்த எடுப்பிலேயே மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இவ் அசம்பாவிதங்களினை நேரில் தம் கண்களினால் பார்த்த தெல்லிப்பழை பொலிஸாரும் கூட அங்கு எதுவுமே நடைபெறவில்லை. பொதுமக்கள் தம்மிடம் யாரையும் பிடித்து ஒப்படைக்கவுமில்லை. இராணுவத்தினர் யாரையும் தாக்கவில்லை என்றனர்.

இந்நிலையில் இவ்வாரத்திற்கு முதல் வாரம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த ஏக்கநாயக்கவும் தெல்லிப்பழை உண்ணாவிரதப் போராட்டத்தில் எதுவுமே நடைபெறவில்லை எனவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிற்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கியதோடு அவர்களுக்கு போக்குவரத்து வசதியினையும் பொலிஸார் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர் எனவும் கூறியிருந்தார்.

இவரின் கருத்திற்கு ஏற்றால் போல் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றியும் உண்ணாவிரதப் போராட்டத்தில் அசம்பாவிதம் இடம்பெற்று இருந்தால் ஏன் முறைப்பாடு பதிவு செய்யவில்லை என கேள்வியெழுப்பியிருந்தார்.

எனினும் இவரது இக்கூற்றிற்கு யாழ். ஊடகவியளாளர்களினால் தக்க பதிலளிக்கப்பட்டபோதிலும் அவரிடமிருந்து உரிய பதிலினை பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனினால் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டு பிரதி யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்னவிடம் யாழ். ஊடகவியலாளர் ஒருவரினால் காண்பிக்கப்பட்டது.

இதற்கு சற்று நேரம் பதிலளிக்க தயங்கிய பொலிஸ் அதிகாரிகள் பின்னர் ஒருவாறாக சுதாகரித்துக் கொண்டு தெல்லிப்பழை உண்ணாவிரதப் போராட்டத்தில் எவ்வித அடிதடி சம்பவங்களும் இடம்பெறவில்லை. மாறாக அங்கு விசில் அடித்ததோடு கூக்குரலும் இட்டனர் என தமது புது வசனத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

இவை எல்லா நிகழ்விலும் சகஜம் தானே. ஏன் நீங்கள் பெரிது படுத்துகிறீர்கள் எனவும் கேட்டனர்.

அங்கு நடைபெற்ற சம்பவத்திற்கு சாட்சியமில்லை. அதனால் தான் நடவடிக்கை இல்லை. நாம் உண்மையைத் தான் கூறுவோம்.

ஆயிரம் தடவைகள் கேட்டால் கூட இதனையே நாம் கூறுவோம் என தம்முடைய வாதத்தினை முடித்துக் கொண்டனர். பின்னர் இவை தொடர்பில் இனி வருங்காலங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு மிக விரைவில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

மேலும் இப்பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன, காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த ஏக்கநாயக்க, யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன்சிகேரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரணவீர ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

# மக்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்காக படையினரை நீதிமன்றில் நிறுத்த முடியாது

## *முன்னாள் இராணுவத் தளபதி கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு*

(கொழும்பு)

யுத்தம் இடம்பெறும் போது பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியமைக்காக படையினரை நீதிமன்றில் நிறுத்த முடியாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார் என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அப்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் இந்த குறிப்பை அனுப்பி வைத்துள்ளார்.

அப்போதைய இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவிற்கும் தூதுவர் பிளேக்கிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை குறித்து அனைவரும் கரிசனை கொண்டுள்ளனர். பாதுகாப்புப் படையினருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மனித உரிமை வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட வேண்டும். வேறுவழி கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

பொலிஸ் விசாரணைகளில் இராணுவத்தினர் தலையீடு செய்யமாட்டார்கள். தொழில்சார் ரீதியில் படையினருக்கு பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என்பது தொடர்பில் அறிவுறுத்தல்களும் எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன. எனினும் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றத்திற்காக படையினரை நீதிமன்றில் நிறுத்த முடியாது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் தீர்வுத் திட்டமொன்றை நோக்கி நகர்த்த முடியும் என படையினரும் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் நம்பிக்கை கொண்டுள்ளதாக ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரம் குறித்து சர்வதேச சமூகத்தினதும் அமெரிக்காவினதும் நிலைப்பாட்டை இராணுவத் தளபதியும் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் புரிந்து கொண்டிருப்பதாக நம்புகின்றேன் என பிளேக் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)



மக்கள் வங்கி, மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்றது. இதன் போது....



யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில் நடைபெற்றது. இதன் போது....

(படங்கள்:- எஸ்.ஆர். கரன்)



யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படுவதையும் நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களுடன் விருந்தினர்கள் மற்றும் அதிபருடன் நிற்பதை படத்தில் காணலாம்.

# மத்திய அரசு மற்றும் தி.மு.க. இடையே பிளவு

### ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவிப்பு

இலங்கை தமிழர்களின் விடயம் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் இந்திய மத்திய அரசாங்கத்தையும் பிரித்து விட்டதாக "த ஹிந்துஸ்தான் டைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய லோக்சபாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச் சர் சல்மான் குர்சித்தின் பேச்சு எதிர்பார்த்ததைப் போல இருக்கவில்லை என்பதால் திராவிட முன்னேற்றக்கழகம் சபையில் இருந்து வெளிநடப்பு செய்கிறது.

அரசாங்கத்தின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகம் இதுவே முதல் தடவையாக வெளிநடப்பு செய்கிறது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியுடனான தமது உறவை தி.மு.க. முறித்துக்கொள்ள ஆரம்பித்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் காங்கிரஸின் சில உறுப்பினர்கள் தி.மு.க வுக்கு ஆதரவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சாவேஸின் மறைவுக்கு சபையில் அனுதாபம்

மறைந்த வெனிசுலா ஜனாதிபதி ஹுயூ கோ சாவேசுக்கு பாராளுமன்றத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் சார்பாக கலாசார அமைச்சர் ரீ.பி. ஏக்கநாயக்க, எதிர்க்கட்சி சார்பாக ஜனநாயக தேசிய முன்னணி எம்.பி.விஜித ஹேரத் ஆகியோர் மறைந்த வெனிசுலாவின் ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் அனுதாபம் தெரிவித்தனர்.

இடதுசாரி இயக்க மேம்பாட்டுக்கு அரும்பாடுபட்ட வெனிசுலா ஜனாதிபதியின் மறைவுக்கு அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் சார்பாக அனுதாபத்தை தெரிவிப்பதாகவும் அவரை கௌரவிப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் ரீ.பி.ஏக்கநாயக்க அவரின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்க அமைச்சர் விமல் வீரவன்சவும் பிரதி வெளியுறவு அமைச்சர் நியோமல் பெரேராவும் அங்கு சென்றுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, இடதுசாரி தலைவரான ஹியூகோ சாவேஸின் மறைவுக்கு தங்களுடைய அனுதாபத்தை வெளியிடுவதாக விஜித ஹேரத் எம்.பி.குறிப்பிட்டார். (அ-2)

# வட்டார எல்லைகள் நிர்ணயகுழு நியமனம்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார வாரியாக பிரித்து எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கான குழுவொன்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாவுல்லாவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான வட்டார எல்லைகளை பிரிப்பதற்கே இக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இக் குழுவில் வவுனியா அரசாங்க அதிபர் எம்.கே. பந்துல கரிச் சந்திர, உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி, வவுனியா சிங்களப் பிரிவு பிரதேச செயலாளர் எஸ். ஜானக, சிரேஷ்ட நில அளவையாளர் பி.சிவதாஸ், புள்ளி விபர உத்தியோகத்தர் எம். தியாகலிங்கம், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.உதயராசா ஆகியோர் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து வவுனியா அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையினை பிரதேச செயலாளர்களிடமிருந்து கோரியுள்ளது (அ-2-266)

# இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன

இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட 8 ஆயிரத்து 700 பேருக்கான முதல் தவணைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தியாவின் வீட்டுத்திட்டம் கடந்த 2010 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தது. முதல்கட்டமாக ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பதாக அறிவிக்கப்பட்டபோது காணி தொடர்பாக காணப்பட்ட சிக்கலைத் தொடர்ந்து அது நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டது. இந்நிலையில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இந்த திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி மூன்று மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 8 ஆயிரத்து 700 பேருக்கான முதல் தவணைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன..

இதனையடுத்து இந்த வருடத்தின் இறுதிக்குள் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (அ-2)

## தமிழ்ப்பாட ஆசிரியர்களுக்கு இன்று செயலமர்வு

(மல்லாவி)

வடக்குமாகாண கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் கோப்பாய் கல்விக்கோட்டம், நல்லூர் கல்விக் கோட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விடயத்திறன் அட்டவணை, வினா உருப்படி தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் தொடர்பான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (அ-3-15)

## மத்தல விமான நிலையம் மக்கள் பார்வைக்கு

அம்பாந்தோட்டை மத்தல மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தினை பார்வையிட இன்று வெள்ளிக்கிழமை வரைக்கும் பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விமான நிலையத்தினை ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு வருகின்றனர்.

அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். நாமல் ராஜபக்ஷ எம்.பி.பாடசாலைகளுக்கு போக்குவரத்து வசதிகளை, பாடசாலை மாணவர்களுக்கு விமான நிலையத்தினை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளார். (அ-2)

# இலங்கையில் சீனாவின் ஆதிக்கம்; இந்திய அரசு அச்சப்படக்கூடாது

### தயாநிதி மாறன் வலியுறுத்து

இலங்கையில் சீனா காலூன்றுவதால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க இந்தியா தயங்கக்கூடாது என்று முன்னாள் மத்திய அமைச்சரான தயாநிதி மாறன் வலியுறுத்தியுள்ளார்.

லோக்சபாவில் இன்றைய இலங்கை விவகாரம் தொடர்பில் நடைபெற்ற சிறப்பு விவாதத்தின் போது உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் இறுதிப் போரின் போது பாதுகாக்கப்பட்ட பகுதிகள் என்று சில இடங்களை அறிவித்து அங்கு பொதுமக்களை வரவழைத்தனர். பல்லாயிரக்கணக்கில் அங்கு திரண்ட பொதுமக்களை குண்டுகளை வீசி படுகொலை செய்தது.

1986 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் மீது இந்தியா உணவுப் பொட்டலங்களை வீசியது. அப்போது ஒரு இந்தியனாக நான் பெருமைப்பட்டேன். இந்தியாவால் எப்படிப்பட்ட உறுதியான முடிவையும் மேற்கொள்ள முடியும் என்பதை அப்போது அது வெளிப்படுத்தியது.

ஆனால் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் இருப்பதால் இந்தியா அச்சப்படுகிறது. நாமும் கூடத்தான் மிகப் பெரிய நாடு .நாமும் வல்லமை படைத்த நாடு தான். நமது நாட்டை நம்மால் பாதுகாக்க முடியுமே. நாங்கள் உங்களைத்தான் எதிர்பார்க்கின்றோம் என்றார் அவர். (அ-2)

# மீன் எழுச்சி திட்டத்தால் ஊடாக வெதுப்பகம் கையளிக்கப்பட்டது

(பூந்தோட்டம்)

வவுனியா பறன்நட்டகல் கிராமத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீன் எழுச்சித் திட்டத்தின் ஊடாக வெதுப்பகம் அமைத்து நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

4 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இவ் வெதுப்பகம் வட்டியில்லா மீன் சுழற்சி நிதியில் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் இவ் வெதுப்பகத்தில் இருந்து பாண், பணிஸ் மற்றும் இதர மாவகை உற்பத்தி பொருட்களை தயாரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் உள்ள பலருக்கும் இதன்மூலம் வேலைவாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் மக்களிடம் வெதுப்பகம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-2-266)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# நம் செபங்கள் உறவை வளர்க்கும் உறுதிப்படும் செபமாக இருக்கட்டும்



தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவோர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்று இயேசு கூறும் வேதாகமப் பகுதி இன்று எமக்குத் தரப்படுகிறது.

இயேசுவின் ஆன்மீக ஆழம் மற்றும் அவரது படைப்பாற்றலுக்கு அழகியதோர் எடுத்துக்காட்டாக அமைகிறது நாம் வாசிக்கும் இறைவேண்டல் பற்றிய இப்பகுதி. செபம், இறைவேண்டல் எவ்வாறு இருக்க வேண்டும். எவ்வாறு இருக்கக்கூடாது என்பதை இதைவிட அழகாக யாரும் கூறி விடமுடியாது என்னும் அளவுக்கு இயேசுவின் உவமை வழி போதனை அமைந்திருக்கிறது. இயேசு சொன்ன செபம் பற்றிய இந்த உவமை நம் கண்களை திறக்க, எச்சரிக்கை விடுக்கும் ஓர் அபாய மணி, இறைபுகழ்ச்சியும், நன்றியும், நோன்பும், பத்திலொரு பங்கு காணிக்கையும் பயனற்றதாக மாறிவிடும் என்று உணர்த்தும் அருமையான உவமை.

உவமையின் முன்னுரையை, செய்தியைத் தெளிவாக பறைசாற்றி விடுகிறது. தாங்கள் நேர்மையாளர்கள் என்று நம்பி மற்றவ களை இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார்.

பல சமயங்களில் நாம் செபம் செய்கிறோம். பல விதமான செபம் செய்கிறோம். பல முறைகளில் செபிக்கிறோம். நம் செபங்களிலெல்லாம் அதன் நோக்கம், உட்பொருள் ஒன்றே. இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவை வளர்ப்பதும் வலுப்படுத்துவதும் அதன் நோக்கம். தவிர பிறிதெதுவும் செபத் தின் இலக்கு அல்ல. எனவே நாம் செபிக்கும் போது நம் செபங்கள் நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவையும் நமக்கும் நம் அயலானுக்குமிடைய உள்ள உறவை வளர்க்கின்றதா என்பதில் கவனம் தேவை.


உவமை கதையில் வரும் பரிசேயரின் செபம் தன்னை உயர்த்தும் செபம். தன்னை பற்றிய தப்பட்டம் தன்னைத் புகழ்ந்து பெருமைப்படுத்தும் செபம். அடுத்தவனை இழிவுபடுத்தும் செபம் இறை உறவையோ மனித உறவையோ வளர்க்கும் செபம் அல்ல. வரித் தண்டுபவனின் செபம் தன்னுடைய பலவீனம், இயலாமை, வெறுமை, தாழ்ச்சி, சார்புநிலை, இவற்றை அடிப்படையாகக் கொண்டு உறவை வளர்க்கும் செபமாக இருந்ததால் இயேசுவின் பாராட்டை பெறுகிறார். நாமும் இவ்வாறு குடும்பமாக செபித்தால், குடும்பத்தில் உறவு உறுதிப்படும். ஆண்டவனின் ஆசீர் குறைவின்றி கிடைக்கும். நாம் உயர்வடைவோம். உயர்த்தப்படுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்




# பாத்திரமறிந்து பிச்சையிடு

## அம்புலிமாமா கதைகள்



ஒரு கிராமத்தில் புருசோத்தமன் என்ற வியாபாரிக்கு முராரி என்ற மகன் இருந்தான். முராரி சிறு வயதிலிருந்தே மிகவும் இரக்க சுபாவமுடையவனாக இருந்தான்.

ஒருநாள் விளையாடச் சென்ற முராரி விளையாடிக் கொண்டிருக்கையில் அவனுடைய நண்பர்களில் ஒருவனது சட்டை கிழிந்துவிட்டது. அவனோ மிகவும் ஏழை. முராரி உடனே தன் சட்டையைக் கழற்றி அவனுக்குத் தந்துவிட்டான். இதைக்கண்ட வியாபாரியான அவன் தந்தைக்கு கோபம் வந்தது. தன்னுடைய மகனை வெகுவாகக் கடிந்து கொண்டு தன் குணத்தை மாற்றிக் கொள்ளும் படி அறிவுரை கூறினார்.

அதைக்கேட்ட முராரியின் தாய் அவனை ஒரு நல்ல குருவிடம் சேர்த்து வியாபாரத்திற்குத் தேவையான அறிவுரைகளை அவர் வாயிலாகக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றாள்.

வியாபாரிக்குத் தன் மனைவி சொல்வது சரியெனப்பட்டது. உடனே தன் மகனை அவன் சர்மா என்ற பண்டிதரிடம் கூட்டிப்போய் தன் மகனது அளவுக்கு மீறிய இரக்க குணத்தைப் பற்றி விபரமாக விளக்கிவிட்டு குருவாக என்னுடைய மகனை விவேகமுள்ள வியாபாரியாக மாற்றுங்கள். எனக்குப்பின் அவன்தான் வியாபாரத்தைக் கவனிக்கப்போவது என்று சொன்னான். அதற்குச் சர்மா புன்னகையுடன் புருசோத்தமா! நான் அவனுக்கு ஞானம் போதிக்கிறேன் என்று கூறி விடைகொடுத்து அனுப்பினார்.

அன்றிலிருந்து சர்மாவிடம் முராரி முறையாகப் பாடங்கள் பயிலத் தொடங்கினான். ஒரு நாள் சர்மா அவனிடம் மகனே நீ மிகவும் நல்லவன். உன்னுடைய இதயத்தில் மற்றவர்களுக்காக கருணை நிரம்பியுள்ளது. ஆனால் உன் கருணையால் உந்தப்பட்டு யாருக்காவது உதவி செய்யுமுன் அந்த நபர் அந்த உதவியைப் பெறத் தகுந்தவனா என்று சிந்தித்து செயற்படு. நீ ஒரு வியாபாரியாகப் போகிறவன். அதற்குத் தேவை சாமர்த்தியம். அத்துடன் நீ கருணையைக் கலந்து மிக சாமர்த்தியமாக ஏமாறாமல் செயற்படு என்றார்.

குருவே கருணைக்கும் வியாபார சாமர்த்தியத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று முராரி கேட்க அதை நீ தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் வந்துவிட்டது. மருத்துவர் வரதாச்சாரி எனக்கு சில மருந்துகள் தருவதுண்டு. இந்த முறை நீ சென்று அவரிடமிருந்து அந்த மருந்துகளை வாங்கிவா என்று சர்மா சொன்னார்.

முராரி தன் குருவின் சொற்படி வரதாச்சாரியிடம் சென்றான். வரதாச்சாரி அவனை சற்று நேரம் காத்திருக்குமாறு சொல்லிவிட்டு ஏனைய நோயாளிகளை கவனிக்கலானார்.

ஒவ்வொரு நோயாளியிடமும் அவர் எனக்கு மூலிகைகள் கொண்டு வரும் ஆளின் தந்தை ஒரு கடுமையான மன நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். தங்கம் பாதரசம் கலந்து அவருக்கு மருந்து தயாரிக்க வேண்டும். அதற்குச் செலவாகும். அந்த ஆள் முடமானவன். அவனால் வேலை செய்து சம்பாதிக்க முடியாது. மிகவும் ஏழை. அவனுக்காக நீங்கள் என்னிடம் பணம் கொடுத்தால் அதில் மருந்து தயாரிப்பேன் என்றவுடன் பலரும் பணம் கொடுத்தனர். முடமான அந்த ஆளைக் கண்டு மனம்



உருகிப் போன முராரி உடனே, மருத்துவரே, என்னுடைய மோதிரத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்றான்.

நோயாளிகள் அனைவரும் சென்றவுடன் முராரியை அழைத்த வரதாச்சாரி இதோ பார் வேடிக்கையை என்று கூறி முடமான அந்த ஆளை



அழைக்க அவன் உள்ளே ஓடி வந்தான்.

பலமாகச் சிரித்த வரதாச்சாரி முராரி முடமானவன் எப்படி ஓடி வந்தான் பார்த்தாயா? அவன் முடவனில்லை. உன்னை சோதிக்கவே உனது குருவின் யோசனைப்படி இந்த நாடகம் நிகழ்த்தினேன். உன்னுடைய கருணையை ஆதாரமாகக் கொண்டு உன்னை எவ்வளவு எளிதாக ஏமாற்ற முடிந்தது என்று பார்த்தாயா? என்று முராரியை கேலி செய்தார். தொடர்ந்து என்னுடைய தொழில் நோயாளிகளை குணமாக்குவது. ஆனால், வெறும் மருந்துகளால் மட்டும் யாவரையும் குணப்படுத்த முடியாது. நோயாளிகளுக்குத் தகுந்தாற்போல் சாமர்த்தியமாகப்பேசி அவர்களைக் குணப்படுத்துகிறேன்.

ஒரு தொழில் வெற்றி பெற சாமர்த்தியம், இனிய சொல் இவை முக்கியம். இவற்றை நீ இன்று புரிந்து கொண் டிருப்பாய். தவிர பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்ற முதுமொழிக்கு இணங்க உன் உதவியைப் பெற விரும்புபவன் அதற்குத் தகுதியானவனா, நல்லவனா உண்மையில் உதவி தேவையா அல்லது ஏமாற்றுக்காரனா என்பதை தெளிவாக அறிந்து கொண்டு உன் கருணையைக் காட்டு என்று புத்திமதி கூறினார்.

அவர் தகுந்த மருந்துகளுடன் தன் குருவிடம் திரும்பிய முராரி நன்றி குருவே. நீங்கள் அந்த மருத்துவர் மூலமாக நடத்திய நாடகத்திலிருந்து நான் கற்க வேண்டிய உண்மைகளைத் தெரிந்து கொண்டேன் என்று வணக்கத்துடன் பதிலுறைத்தான்.

# மூன்றாம் உலகப்போர்

67

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

எமிலி பேட்டியில சொன்னது ஊருக்கெல்லாம் கேட்டுச்சோ இல்லையோ ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறைக்குச் 'சத்தமாக் கேட்டுருச்சு.

அரசாங்கமும் அதிகார வர்க்கமும் காடுகளையும் மலைகளையும் வெட்டி வெட்டித் திங்கிறாகன்னு எமிலி சொன்னது, நரம்புல ஊசி போட்டமாதிரி அவுக உச்சந்தலையில ஏறிப்போச்சு. தீவிரமாக் கண்காணிச்சு எல்லா ஏற்பாடுளையும் கையில வைச்சுக்கிட்டுக் களத்துல இறங்கிட்டாக.

• • • • • •

மத்துமணி வீட்டுல என்னைக்கும் போலத்தான் விடிஞ்சது அன்னைக்கு ராத்திரியும். ஆறாம் மாசக் கர்ப்பிணி மாதிரி லேசா வெளுக்குது கிழக்கு. ரிவி பாத்துப் படுக்கிற ஊரு முந்தி மாதிரி எந்திரிக்குதில்ல காக்கா குருவி போட்ட சத்தத்துல தூங்கு மூஞ்சி மரம் முழிச்சுருச்சு; ஊரு முழிக்கல.

"ஏ... அஜய் ..ரூப்:.. இன்னுமா தூங்கிறீங்க? ஸ்கூல் இருக்குல்ல. எந்திரிங்க."

லச்சுமிக்குத் தெரியும்-கத்துனா எந்திரிக்காதுக கழுதைக. கடைசியா தொடையை ஒரு நமண்டு நமண்டுனாத்தான் எந்திரிப்பா ரூப்கலா. காதுல சுண்டுவிரல் விட்டு ஒரு ஆட்டு ஆட்டுனாத்தான் எந்திரிப்பான் அஜய். அவுந்த குடுமிய அள்ளி முடிஞ்சுகிட்டே புருஷனப்பாத்தா ஒரு பார்வை. அவன் தலமாட்டுல கொஞ்சம் மிச்சம் இருந்துச்சு... பல்லுவிளக்கமுன்ன குடிக்கவேண்டிய சாராயம்.

குடிச்சுட்டுப்படுத்தா இந்தாளுக்கு கோழிகூப்புடத்தான் கிறுக்குத் தெளியும்.

தடதட தட்

... ... ...

தடதட தட்

பால்க்காரன் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

"ஏ பால்க்காரப் பையா...! நீ வைச்சிட்டுப்போ, நான் எடுத்துக்கிர்றேன்."

படபட பட்

... ... ...

படபட பட்

சத்தம் வேறமாதிரிக் கேட்குதே இது பால்க்காரன் தட்டுற மாதிரியில்லையே சண்டைக்காரன் தட்டுற மாதிரியில்ல இருக்கு.

கதவத் தொறந்தா-

ஏழெட்டு ஆழுக வெறப்பா நிக்கிறாக. பாத்தா பொலிசு மாதிரி தெரியுது.

"யாத்தே..." பயந்தவ ஒரு எட்டு பின்னுக்கு வச்சா.

மொத்தப் போலிசும் வீட்டுக்குள்ள வந்து நெறஞ்சு நிக்குது. ஒரு டிஎஸ்பி, ரெண்டு இன்பெக்டருக ஆம்பளைப்போலிசு ரெண்டு, பொம்பளப் பொலிசு ரெண்டு. ஏழேழு ஜென்மத்துக்கும் நீ தப்பமுடியாதுங்குற மாதிரி ஏழு போலிசுக.

"நாங்கள் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையிலிருந்து சோதனை போட வந்திருக்கோம். இது முத்துமணி வீடுதான?"

அவ வேர்த்து விவிறுத்ததுல வாய் இழுக்குது; நாக்கு கொழறுது; ஒடம்பு உதறுது; வார்த்த நடங்குது.


"ஆ..மா...ஆமா.....மா....ஆ...மா..."

ஆரம்பிச்சிருச்சு அதிரடி அடுத்த நிமிசமே. மொதல்ல போனைத் துண்டிச்சாக மின்சார அட்டை எடுத்து மீட்டர் அளவுகளக் குறிச்சாக; கார் பதிவு நம்பரைக் குறிச்சுக்கிட்டு சட்டுன்னு புடுங்கிட்டாக சாவிய. வண்டி எவ்வளவு ஓடியிருக்குன்னு கிலோமீற்றரை பதிவு பண்ணுனாக. கியாஸ் இணைப்பு யார் பேருல இருக்குன்னு எழுதிக்கிட்டாக; விட்டுக்குள்ள இருக்கிற ஆடம்பரப்பொருள் என்னன்னு ஒண்ணொண்ணா அலசுறாக. குழந்தைக பள்ளிக்கூடக் கட்டணத்துக்கு ரசீது எடுத்தாக.

வீட்டுக்குள்ள இருக்குற ஆளு வெளிய போகக் கூடாது. வெளிய இருக்குற ஆளு வீட்டுக்குள்ள வரக் கூடாதுன்னு வெறைப்பா நிக்குது வாசல்ல ஒரு போலீசு.

இப்ப வீட்டு மதிப்ப நோட்டம் பாக்குறாக.

அது தேக்கங்கதவுதான்னு தெரிஞ்சுக் கிட்டு சதுர அடி அளக்குறாரு



ஒரு இன்ஸ்பெக்டரு.

கூடத்துக்கு மார்பிள், சமையலறைக்கு கிரானைட், படுக்கையறை ரெண்டுக்கும் செராமிக் டைல்ஸ் சமையல் ரூமுக்குத் தவிர மீதி எல்லா ரூமுக்கும் வால்பேப்பரு. அளக்குது எல்லாத்தையும் போலீசு டேப்பு எடுத்து.

## படமெடுத்த பாம்ப படத்துலயே குத்துனமாதிரி...

"அய்யய்யோ என்னமோ ஒண்ணு ஆகப்போகுது எந்திரிங்க"- வீடுகிழிய லச்சுமி கத்துன கத்தல்ல விருட்டுன்னு எந்திருச்சு குடிகாரத் தொப்பைக்கு மேல லுங்கிய ஏத்திக் கட்டி, ஏய்... என்னா...என்னான்னு பதறி எந்திரிச்சு உக்காந்தான் முத்துமணி.

அன்னைக்குத்தான் தொடையும நமண்டாம, காதுக்குள்ள வெரலும் விடாமத் தானா எந்திருச்சு உக்காருதுக பாவம் பிள்ளைக. நடக்குறது என்னான்னு சுர்ன்னு மூளைக்குள்ள ஏறிப்போச்சு முத்துமணிக்கு.

"சார்...சார்... என்னசார் இது?"

அவுந்த லுங்கிய ஒருகையில புடிச்சுக்கிட்டு ஒரு கைய நீட்டிக்கிட்டே ஓடிவந்தான் முத்துமணி.

"நீங்கதானா முத்துமணி? வனத்துறை வாட்ச்சர்?"

"ஆமா சார் நான்தான்சார்"

"எங்களோட நீங்க ஒத்துழைச்சா ஒரு பிரச்சனையும் இல்ல."

"மறந்துராதீங்க நான் ஒரு அரசாங்க ஊழியன்"

"பிரச்சினையே அததான். நாங்க கேக்கிற ஆவணங்கள நீங்களே கொடுக்கிறீங்களா? நர்ங்க எடுத்துக்கவா?"-மரியாதையா மிரட்டுனாரு டி.எஸ்.பி.

"வாரண்ட் இருக்கா சார் வாரண்ட்டு?"

"இல்ல"

"என்ன சார் போலீஸ் அதிகாரிங்க நீங்க, வாரண்ட் இல்லாம சோதிக்கக் கூடாது. குற்ற விசாரணைப்பிரிவு 100வது சட்டம் தெரியாதா உங்களுக்கு?"

திகைச்சுப்போனாரு டிஎஸ்பி.

"இவன் சட்டம் படிச்ச களவாணிப் பயலா இருக்கானே..."கலங்கித் தெளியிற தண்ணி மாதிரி குழம்பித் தெளிஞ்சாரு.

அதே குற்றவிசாரணைச் சட்டத்துல 165ஆவது பிரிவு தெரியாதா உங்களுக்கு மாவட்ட நீதிபதிக்கு முன்தகவல் கொடுத்துட்டுச் சோதிக்கலாம்னு இருக்கு. முன்தகவல் கொடுத்தாச்சு, ஒழுங்கா வழிவிடுங்க ஓரமா உக்காருங்க" படமெடுத்த பாம்ப படத்துலயே குத்துனமாதிரி ஆகிப்போச்சு முத்துமணிக்கு.

உள்ளேயிருந்த ஒரு திருட்டுத் தைரியம் உடம்பை விட்டு ஓடிப் போயிருச்சு வரண்டுபோன நாக்கு அடிநாக்குல போய் ஒட்டிக்கிட்டு இப் போதைக்கு எந்திரிக்க மாட்டேங்குது. பஞ்சு கட்டுது இன்னும் கழுவாத கண்ணு. மயக்கமா வந்து சுவருல சாஞ்சு, சரிஞ்சு முட்டிக்கால் ரெண்டையும் முட்டுக்கொடுத்து அதுல தலைய முட்டித் தம்பாயம் அத்துக் கெடக்கா லச்சுமி. அம்மா தோள் ரெண்டையும் புடிச்சுத் தொத்திக்கிட்டு வீட்டுக்கு ஒரு கெடுதி வந்திருக்குன்னு மட்டும் புரிஞ்சுக்கிட்டு பயந்து பதுங்கி



நிக்குதுக பிள்ளைக.

முத்துமணி கண்ணு அடிக்கடி கட்டில் மேல பெரண்டு திரும்பறதைக் கண்டுபுடிச்சிட்டாரு டிஎஸ்பி. ஒரு இன்பெக்டரையும் போலிஸ்காரனையும் கூட்டிக்கிட்டு அவரே உள்ள போனாரு.

தலையணையைப் பிதுக்கிப் பாத்தாக; உறைய உருவி எறிஞ்சாக. மெத்தைய அமுக்கி அமுக்கிப் பாத்தாக பெரட்டிப் பெரட்டிப் போட்டாக ஒண்ணும் சிக்கல.

கட்டிலையே பொரட்டித் தலைகீழாப் போடுங்கன்னாரு டிஎஸ்பி. பினாமி பேருல இருக்கிற பங்குப் பத்திரங்களையும் சேமிப்பு ஆவணங்களையும் கட்டிலுக்கு அடிப்பக்கமா பசை டேப்பைப் போட்டு ஒட்டி வச்சிருப்பானுக தெள்ளக் கடஞ்ச திருட்டுப் பயலுகன்னு தெரியும் டிஎஸ்பிக்கு.

கட்டிலத் திருப்பிப் போட்டுப் பாத்தா நூலாம்படையும் கரப்பாம் பூச்சியும் தவிர ஒண்ணும் தெரியல கண்ணுக்கு. டிஎஸ்பி முகத்துல ஈஆடல.

கல்லுப்பிள்ளையார் மாதிரி ஒரு மூலையில நிக்குது கரும்பச்சை நெறத்துல ஒரு பீறோ.

"பீறோ சாவி எடுங்க நீங்களே தெறக்கிறீங்களா? நாங்க தெறக்கவா?"

கண்ணு கலங்கி, கையி நடுங்கி பீரோவைத் தெறந்தா லச்சுமி.

பட்டுப்புடவை பதினாறு-ரொக்கம் இருபத்தோராயிரம், ஏழுபவுன், பதினாறுபவுன்ல தங்கச்சங்கிலி ரெண்டு, ஓண்ணேகால் சவரன்ல தங்கவளவி ஆறு, குழந்தைக வெள்ளிக் கொலுசுகநாலு, காசுமாலை ஒண்ணு, வைர மோதிரம் ரெண்டு.

"இந்த நகையெல்லாம் ஏது?"

"கல்யாணத்துல எங்க அம்மா அப்பா போட்டுவிட்டது." அழுது சொல்றா லச்சுமி. கல்யாணத்தன்னைக்கே கொழந்தைகளுக்கு கால் கொலுசும் வாங்கிக் கொடுத்துட்டாகளா? சரி! கல்யாணத்துக்கு வந்ததாகவே இருக்கட்டும். கணக்குக் கீாட்டி செவ்வை வரி 'கட்டியிருக்கீகளா?"

"சார்! அவ விபரம் தெரியாதவ அதெல்லாம் அவளுக்குத் தெரியாது"-பதறிட்டான் முத்துமணி.

"சரி நீங்க விவரமான ஆளு. நீங்களாவது கட்டியிருக்கீகளா?"

உதடும் நாக்கும் உலர்ந்துபோச்சு முத்துமணிக்கு; பேச்சுவரல.

"சார்... வங்கிக் கணக்குப் புத்தகம்; கிடைச்சிருச்சு"

இப்ப தெரியப்போகுது உங்க சங்கதியின்னு ஒரு இபிகோ சிரிப்பு சிரிச்சுக்கிட்டே பாஸ்புக்கப் புரட்டினாரு டிஎஸ்பி. மூஞ்சி செத்துப் போச்சு டிஎஸ்பிக்கு.

எந்த மாசத்துலயும் பன்னிரண்டாயிரத்துக்கு மேல போடவும் இல்ல. நாலாயிரத்துக்குமேல எடுக்கவுமில்ல.

(தொடரும்)

# ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

நாடெங்கிலும் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் கடற்றொழிலாளர்கள் தேசிய ஒற்றுமையை மையமாக தங்கள் உயிரையே பணயம் வைத்து கடற்றொழிலில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தை இன்று கட்டியெழுப்புவது குறித்து நாம் அனைவரும் பெருமையடைய வேண்டுமென்று கடற்றொழில் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நிகழ்வொன்னில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துரைக்கையில், தமது அமைச்சு நாட்டின் நாலா பக்கங்களிலும் உள்ள கடற்றொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாக் செயற்படுத்தி வருகிறதென்றும் இன்று வடக்கு கிழக்கு உட்பட நாடெங்கிலும் கடற்றொழிலாளர்களுக்கான துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினார்.

இலங்கையில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் ஒரு சிறு எண்ணிக்கையினர் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். மீன்பிடி தொழிலுடன் சம்பந்தப்பட்ட மீன் விற்பனை, மீன் கடைகளை நடத்துதல் போன்று பலதரப்பட்ட தொழில்களில் இன்று ஐந்து இலட்சம் பேர் தங்கள் வாழ்வாதாரமாக கொண்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

நாம் கடற்றொழிலாளர் சம்மேளனங் களை நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஏற்படுத்தி அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொண்டோம். மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஆகக் கூடிய அங்கத்தவர்களான 13 ஆயிரம் பேர் சேர்ந்து கொண்டார்கள். அதற்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணம் மன்னார், கல்முனை முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் சேர்ந்து கொண்டனர்.

இப்போது நாடெங்கிலும் இத்தகைய கடற்றொழிலாளர் சம்மேளனங்கள் சிறப்பாக இயங்குகின்றன. நாம் மாதத்திற்கு 100 ரூபாவை கட்டணமாக அறவிடுகிறோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நானும் பந்துல பத்மகுமாரவும் ஒரே வகுப்பில் படித்தது இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. பந்துல பத்மகுமார அன்று இடதுசாரி கொள்கையை ஆதரித்தார். நானும் அவரது நிலைப்பாட்டிலேயே இருந்தேன். அதற்கு பின்னர் நாம் பத்திரிகை தொழிலும் ஈடுபட்டோம். நான் பல அரசியல் பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறேன். அமைச்சர் பசில் ராஜபக்சவும் எங்களுடைய சக வகுப்பு மாணவராக இருந்தார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## திருக்கேதீச்சரத்திற்கு இ.போ.ச.பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீச்சரம் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் போக்குவரத்து வசதியை கருத்திற் கொண்டு நாளையும் நாளை மறுதினமும் யாழ்.பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையங்களிலிருந்து பயணிகளின் வருகைக்கேற்ப போக்குவரத்துச் சேவை இடம்பெறவுள்ளதாக கோண்டாவில் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா ஊடாக திருக்கேதீச்சரம் ஆலயம் வரையும் பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து நெல்லியடி,கொடிகாமம், வவுனியா ஊடாக திருக்கேதீச்சரம் ஆலயம் வரையும் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா ஊடாக திருக்கேதீச்சரம் ஆலயம் வரையும் பேருந்துச் சேவை நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ)

# மன். உணவக உரிமையாளர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு கருத்தமர்வு

மன்னார் நகரிலுள்ள உணவகங்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல் மற்றும் தரத்தை உயர்த்துதல் தொடர்பில் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கு ஒன்று நேற்றுக்காலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் நகரில் உள்ள உணவகங்களில் ஏற்பட்டுள்ள சுகாதார குறை பாடுகள் தொடர்பிலும் அவற்றை எவ்வாறு மேம்படுத்துவது தொடர்பாகவும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் விளக்கமளிக்கப்பட் டது.

அத்துடன் உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் மக்களுக்கு எவ்வாறு உணவு வகைகளை கையாண்டு பரிமாறுவது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் மன்னார் நகர சபையின் தலைவர் சந்தான் பிள்ளை ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ், மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி ஞானசீலன் குணசீலன், மாவட்ட பொதுசுகாதார பரிசோதகர்கள் மற்றும் மன்னார் நகரில் உள்ள உணவகங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# போர்க்குற்றச் செயல்கள் குறித்து கூட்டமைப்பிடமும் விசாரணை

## சிங்கள நாளேடு தெரிவிப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நாட்டில் இடம்பெற்ற போர்க்குற்றச் செயல்களுக்கு வழங்கிய பங்களிப்பு குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றச் செயல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் பங்கிருப்பதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்கள் என்னிடம் உள்ளது என பிரதி அமைச்சர் கருணா தெரிவித்துள்ளார். புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்த் செல்வனின் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு போர்க்குற்றச்செயல்கள் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரானதீபனின் மிக நெருங்கிய உறவினர் என கருணா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனீவா சென்று இலங்கைக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்துமாறு கோரியுள்ளதாக குறித்து சிங்கள ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# வர்த்தக, உணவகங்கள் மீது சுகாதார பரிசோதகர்கள் ஆய்வு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் மற்றும் மாங்குளம் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் வீ.விஜயஜங்கரன் தலைமையில் மாங்குளத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது சுகாதார ஆய்வுகள் மேற்கொண்ட போது காலாவதியான உணவு பொருட்களுடன் சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரிப்பதற்கு தயாராக இருந்த மாமிச உணவு வகைகள் மற்றும் உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

மாங்குளத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் காலாவதியான பொருட்களுடன் சுகாதார சீர்கேடான வகையில் உணவுப் பொருட்களும் விற்கப்படுவதாக மக்கள் புகார் தெரிவித்ததை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடவடிக்கையின் போது சில உணவகங்களும் சில பல்பொருள் வாணிப நிலையங்களும் காலாவதியான சிறு குழந்தைகளுக்கான பால் வகைகள், குளிர்பானங்கள், பிஸ்கட் வகைகள் உட்பட உணவகங்களின் உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் இவ் உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் உரிமையாளர்களின் சம்மதத்துடன் காலாவதியான பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன. (அ-3-15)

# தமிழக மீனவர்களை நாம் தாக்கவில்லை

## கடற்படை பேச்சாளர்

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்ளவும் இல்லை. துப்பாக்கி சூடு நடத்தவும் இல்லை எனறு கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாகவும் இதில் இந்திய தமிழக மீனவர் ஒரு படு காயமடைந்துள்ளதாகவும் வெளியான செய்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது கடற்படையினர் அவ்வாறான காரியங்கள் ஈடுபடுவது இல்லை. இது உண் மைக்கு புறம்பான செய்தியாகும் என்றார். (அ-2)

# பயங்கரவாத தடுப்பு குறித்து சர்வதேச பிரகடனம் வேண்டும்

## வலியுறுத்துகிறது இலங்கை

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்பு தொடர்பில் சர்வதேச பிரகடனமொன்று அவசியம் என இலங்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் 22 ஆவது மாநாட்டில் இலங்கை இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் வியாபித்துள்ள பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த உரிய சர்வதேச பிரகடனமொன்று விரைவில் அமுல். படுத்தப்பட வேண்டும்.

1996 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பிரகடனமொன்று உருவாக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடுப்பு சட்டங்களை உருவாக்குவதற்கு இலங்கை எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்கும்.

பயங்கரவாதற்கு எதிராக போராடி வாழ்வதற்காக உரிமையை உறுதிப்படுத்த இவ்வாறு சர்வதேச ரீதியான பிரகடனங்கள் அவசியமானது என இலங்கை அறிவித்துள்ளது. (அ-2)



வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கடந்த 5 ஆம் திகதி கல்திட்டி கொக்குவில் மேற்கு வைரவர் கோவில் ஆலயத்தில் நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் இரவீந்திரதாசனினால் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:-எஸ்.ஆர்.கரன்)

# கிராமிய மகளிருக்கான தொலைபேசியூடான கற்றல்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-II



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பெண்ணடிமைக்கெதிராக பல திசைகளிலிருந்து பலமான குரல்கள் எழத்தொடங்கியிருப்பது நல்லதொரு அறிகுறி எனக் கொண்டாலும் இன்னும் பெண்களுக்கெதிரான வன்முறை இருந்து கொண்டேயிருக்கின்றது. கலாசாரம், பண்பாடு , விழுமியங்கள் என பேசிக்கொண்டிருக்கும் அதே வேளையில் தினமொரு பாலியல் வன்முறையும் துஷ்பிரயோகமும் பெண்களுக்கெதிராக குறிப்பாக சிறுமிகளுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றமையை அறிய முடிகின்றது. **வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர்கள் தலை கவிழ்ந்தார்** என்பது பெயரளவி லேயே இருக்கின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

இப்போதெல்லாம் திருமண பந்தங்களிலுள்ள குளறுபடிகளுக்கூடாக படித்தவர்கள் மட்டத்தில் பெண் என்பவள் வீட்டிலே சமையலறை வேலை செய்பவளாக மட்டும் ஒடுக்கப்பட்டுப் போவதையும் அவள் படித்திருந்தும் வேலை செய்ய அனுமதிக்காத தன்மையும் காணப்படுவது மனதை இன்னமும் நெருடவே செய்கின்றது.

சம உரிமை, சமத்துவம் என அனைவருமே அலட்டிக் கொண்டிருக்கையில் பால் ரீதியான ஒடுக்குமுறைக்கு எதிராக இருபாலாருமே கிளர்ந்தெழவேண்டிய தருணம் இது. பெண்ணாக சிசுவில் இருந்து இச்சமூகத்தின் நெருக்கு வாரங்களுக்கூடாகவே வளர வேண்டிய தேவையும் அவளுக்கான அடிப்படையுரிமைகள் மறுக்கப்படும் தன்மையும் பாமர மக்களை விட படித்த மேதாவிகளின் குடும்பங்களில் நடைபெறுவதனை இன்னும் இன்றும் நாம் காணலாம்.

பெண்ணை குழந்தை பெறும் இயந்திரமாகவே கருதும் கூட்டத்தின் நடுவே அவளுக்குரிய உரிமைகளையும் வசதிவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நல்ல ஆண் மக்களும் எம்முடனேயே இருக்கின்றார்கள் என்பது ஒருவகையில் எமக்குப் பெருமையாகவுமிருக்கின்றது.

இன்னொரு பக்கத்தில் பெண்ணுரிமை பற்றி கூறிக் கொண்டு குறிப்பிட்ட ஒரு சில பெண்கள் அனைத்து சலுகைகளையும் தாமே அனுபவித்துக் கொண்டு ஏனைய பெண்களை இச்சலுகைக்குள் உள்வாங்குவதை தவிர்ப்பதையும் இன்னும் தடுப்பதையும் காணலாம். இங்கே இப்படியான ஒடுக்கு முறையை ஆண்களே தடுக்க மற்றும் தவிர்க்க முற்படுவது அவசியம்.

இதில் ஆண்களின் நியாயமான செயற்பாடுகள் பெண்ணடிமையை தடுக்க முனைவதை அவதானிக்கலாம். இவையனைத்தையும் ஒருங்கிணைந்து பார்த்தால் பெண்களை கல்வியறிவினூடாக வலுவூட்டி அவர்களினது அடிப்படை உரிமைகளை அனுபவிக்க வழி செய்தல் வேண்டும்.

கிராமிய மகளிரிடையே இவ்வாறான கல்வியை வழங்குவதற்கு முன்னோடித் திட்டமாகவே ஐக்கிய நாடுகளின் கல்வி மூலமான அபிவிருத்திக்கான நிறுவனம் (Common wealth of Learning) உருவாக்கியிருக்கின்றது. பல நாடுகளில் இந்நிறுவனத்தின் இவ்வாறான திட்டங்கள் மகளிரை அவர்தம் கல்வியறிவை விருத்தி செய்வதன் மூலம் வலுவூட்டுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. மகளிரை குறித்ததான திட்டமிது என்றாலும் அடிப்படையில் விவசாயப் பெருமக்களுக்கான வாழ்நாள் கல்வி (Life Long Learning For Farmers - L3 Farmers) எனவே இது அழைக்கப்படுகின்றது. வீட்டிலடைப்பட்டிருக்கும் பெண்களுக்கு கல்வியறிவை, பொதுவான விடயங்களை, இன்னும் உலக நடப்புக்களை அறிய வைப்பதற்கான ஊடகமாக தொலைக்காட்சியும் வானொலியும் இருக்கின்ற போதிலும் இப்போது அனைவரது கையில் இருக்கும் கைப்பேசியை, அதன் தொழில்நுட்பத்தை வெறுமனே பேசுவதற்கு மட்டும் பயன்படுத்தாது இதன் மூலமாக தேவையான தகவல்களனைத்தையும் குறிப்பாக கல்வியறிவைக் கொடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

இலகு தொழில்நுட்பமாக இத்தொழில்நுட்பம் மாறியிருப்பதுவும் ஒவ்வொருவர் கையிலும் கைப்பேசி இருப்பதுவும் எங்கு சென்றாலும் கையுடன் எடுத்துச் செல்லும் வசதியிருப்பதாலும் கைப்பேசி அல்லது மொபைல் போன் தொழில்நுட்பத்தினூடாக கிராமிய மகளிரை இணைத்திருக்கின்றோம்.

இது ஒரு ஆரம்ப படி மட்டுமே. வட பகுதியில் யாழ்ப்பாணத்தில் 300 கிராமிய மகளிரையும் தென்னிலங்கையில் அம்பாந்தோட்டையில் 250.கிராமிய மகளிரையும் இணைத்து இத்திட்டம் ஒரு முன்னோடி திட்டமாக அறிமுகமாகின்றது. மார்ச் 11 ஆம் திகதியிலிருந்து கேட்கக் கூடியதாக இத்திட்டம் மொபிடெல் தொலைபேசி வலையமைப்பினூடாக வருகின்றது.

இத்திட்டத்தில் இணைக்கப்பட்டவர்கள் தவிர ஏனையோர் செவிமடுக்க விரும்பினால் கேட்கும் நேரத்திற்கான கட்டணம் மொபிரெலினால் அறவிடப்படும்.

# முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரங்களை உடன் கட்டுப்படுத்த கோரிக்கை

## ஜனாதிபதிக்கு வெள்ளி அரங்கம் கடிதம்

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளி அரங்கத்தினாலேயே இந்த கோரிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெள்ளி அரங்கத்தின் சார்பாக ஜயந்த தனபால மற்றும் பேராசிரியர் சவித்திரி குணசேகர ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளனர்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்த பிரசாரங்களினால் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டுள்ளதுடன் சுவரொட்டிகள் மற்றும் நவீன ஊடகங்களில் முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரங்கள் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக நீங்களும் அறிந்திருப்பீர்கள். இந்த பிரச்சினையை உடனடியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இந்த கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (அ-2)

# கடந்த ஆண்டில்

# சட்டவிரோத மதுபானம் மற்றும் சிகரெட் விற்பனை; 321 வழக்குகள் பதிவாகின

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மட்டும் சட்டவிரோதமான முறையில் மதுவிற்பனை, சிகரெட் பாவனை தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிமன்றில் மதுவரித் திணைக்களத்தினால் 321 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் வரையிலான ஒரு வருட காலப்பகுதியில் 21 வயதிற்கு உட்பட்டோருக்கு சிகரெட் விற்பனை செய்தமை தொடர்பாக 195 வழக்குகளும் சட்டவிரோத மதுபாவனை தொடர்பாக 126 வழக்குகளுமாக 321 வழக்குகள் வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி.ரகுநாதனால் வவுனியா மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்களிடம் விசாரணை செய்த வவுனியா மாவட்ட நீதிபதி அலெக்ஸ்ராஜா இவர்களிடம் இருந்து ஒன்பது இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவினை அபராதமாக விதித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் வவுனியாவில் சட்டவிரோத மதுபாவனையும் 21 வயதிற்கு உட்பட்டவர்களின் சிகரெட் பாவனையும் அதிகரித்து செல்கின்றமையும் அதனால் பல அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதுதவிர மதுபாவனை அற்ற இலங்கையை உருவாக்குவோம் என கூறிக்கொள்ளும் அரசாங்கம் உணவகங்களுடன் இயங்குகின்ற மதுபானசாலைகளை காலை 11 மணியில் இருந்து இரவு 10 மணிவரை திறக்க முடியும் எனவும் அதற்கான அனுமதியினை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக பெறமுடியும் எனவும் தெரிவித்துள்ளது.

இது சமூக ஆர்வலர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் மதுபாவனை மேலும் அதிகரிக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இம் மதுபானசாலைகள் இதுவரை காலமும் காலை 11 மணிக்கு திறந்து மதியம் 2 மணிக்கு மூடப்பட்டு மீண்டும் மாலை 5 மணிக்கு திறந்து 10 மணிக்கு மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

# அமெரிக்க பிரேரணை வசனங்கள் திருப்தியளிப்பனவாக இல்லை

## சுரேஷ் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தின் வசனங்கள் திருப்தி அளிப்பதாக அமையவில்லை என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் வெளியாகும் ஊடகச் செய்திகளில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானத்தின் வாசகங்கள் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை. இந்தமுறை கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் கடந்தமுறை கொண்டு வரப்பட்டதை விட சற்று கடுமையாக இருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

போர்க்குற்றம் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை தேவை என தாம் கோருவதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

இறுக்கமான ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்று விரும்புவதாக தெரிவித்த அவர், எனினும் அமெரிக்காவை மாத்திரமே தாம் நம்பியிருக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து தங்கள் நிலைப்பாட்டை எடுத்துக் கூறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# இலங்கை வேலை திட்டங்களுக்கு அமெரிக்கா மீண்டும் நிதியுதவி

இலங்கையில் நடைபெறவுள்ள இரண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக அமெரிக்கா நிதி உதவி வழங்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஹிந்து பத்திரிகையின் தகவல்படி அமெரிக்காவினால் 5 இலட்சம் டொலர்கள் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிதி வடமாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்காகவும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மறுசீரமைப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டினை உறுதி செய்யும் வகையிலான வேலைத்திட்டத்துக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நீண்டகாலப் போக்கில் இந்தியா இலங்கையை காப்பாற்ற திட்டம்


இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவுக்கு இரட்டைமுகம்-இரட்டைநாக்கு என்று தமிழக அரசியல்வாதிக்ள் விமர்சிக்கிறார்கள். ஆனால், இந்தியாவுக்கு ஒரே முகம்தான் ஒரே நாக்குத்தான். அது எப்போதும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவே இருக்கும் என்கிறார்கள் இந்தியத் தலைநகரத்தில் உள்ள உயர் அதிகாரிகள்.

அவர்கள், மேலும் பிரபாகரனின் மகன் பாலநச்சந்திரன் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்ட புகைப்படம் இந்திய நாடாளுமன்றம் வரை அதிர்வை ஏற்படுத்திய பிறகும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடமிருந்து பேட்டி என்ற பெயரில்-கொஞ்சமும் கிறுங்காமல், வார்த்தைகள் வெளிப்படுகிறதென்றால், அதன் பின்னணி என்ன என்றும் கேட்கிறார்கள்.

"அப்படி ஒன்று (பாலச்சந்திரன் படுகொலை) நடந்திருந்தால் அது எனக்குத் தெரிந்திருக்கும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது அதை செய்திருப்பார்களேயானால் நான் அதற்கு பொறுப்பேற்றுக் கொள்வேன். ஆனால், அப்படி ஒன்று நடக்கவேயில்லை. நாங்கள் அதை முழுமையாக மறுக்கிறோம்" என்று இந்தியாவின் பிரபல ஆங்கில நாளேட்டிற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அளித்த பேட்டி - தலைப்புச் செய்தியாக வெளிவந்தது.

அந்தப்பேட்டியிலேயே, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தில் இந் தியாவின் நிலை பற்றி கருத்து கூறி யிருக்கும் மகிந்த ராஜபக்ச, "இலங் கைக்கு அருகில் உள்ள நாடு, நட்பு நாடு என்ற அடிப்படையில், தான் என்ன செய்யவேண்டும் என்பதை இந்தியா உணர்ந்தே இருக்கிறது. நான் இந்தியாவுக்கு கட்டளையிட முடியாது" என்றும் கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் உள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் தமிழுணர்வு அமைப்புகளும், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்று குரல் கொடுத்து வரும் நிலையில், நட்பு நாடான இந்தியா தங்கள் பக்கம்தான் நிற்கும் என்று இலங்கை ஜனாதிபதி எப்படிப்பேச முடிகிறது. அதுவும் இந்தியாவைச் சேர்ந்த ஆங்கில பத்திரிகையிலேயே எப்படி அதனை முன்பக்க செய்தியாக வெளியிடச் செய்ய முடிகிறது என்பதே டெல்லியில் உள்ள பத்திரிகையாளர்களிடையே நடைபெறும் விவாதமாகும். அவர்கள் இதுகுறித்து, வெளியுறவுத்துறை அதிகாரிகளிடம் பேசம்போது பல தகவல்கள் கிடைத்துள்ளன. மனித உரிமை ஆணையத்தில் மார்ச் 4ஆம் திகதியன்று அமெரிக்காவின் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்கு முதல்நாளே (மார்ச்3) அந்தத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் இந்திய அதிகாரிகளிடமும் கசியத் தொடங்கின. போர்க்குற்றங்கள் பற்றி விசாரிக்க ஐ.நா. சார்பில் சுய அதிகாரமுள்ள ஓர் அமைப்பை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்பதும், இலங்கை அரசே நியமித்த எல்.எல்.ஆர்.சி எனப்படும் போர்ப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கான தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் தனக்குள்ள பொறுப்புகளை உணர்ந்து இலங்கை அரசாங்கம் செயல்பட வேண்டும் என்றும், அந்தத் தீர்மானங்கள் வரைவு செய்யப்பட்டிருப்பதாக, கடந்த ஞாயிறு அன்று கசிந்த தகவல்களின் தொடர்ச்சியாக, இவற்றுக்கு ஒத்துழைப்பக்கவோ பொறுப்பேற்கவோ இலங்கை அரசாங்கம் தவறினால், ஈரானைப் போல் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்க ஐ.நா. சபை மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கடுமையான வாசகங்கள் அந்தத் தீர்மானத்தில் இருப்பதாகவும் தகவல் வெளிவந்தது.



ஐ.நா.உரிமை ஆணையத்தில் உள்ள 47 நாடுகளில் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஐரோப்பிய நாடுகள் உள்பட 30 நாடுகளின் ஆதரவு உறுதியாவிட்டது. மேலும் சில நாடுகளும் ஆதரிக்க முன்வந்துள்ளன. இந்த ஆணையத்தில் இலங்கையின் கூட்டாளிகளான சீனாவும் ரஷ்யாவும் இல்லை. இந்தியா மட்டும்தான் இருக்கிறது. அதனால், இந்தியா இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது மிக முக்கியமானது என்பதை தமிழகக் கட்சிகள் மட்டுமல்ல, உலக நாடுகளும் எதிர்பார்க்கின்றன. ஆனால், இந்தியா திங்கள் இரவு வரை (மார்ச் 4) இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் நிலையில் இல்லை.

தமிழக எம்பிக்கள் ராஜ்யசபாவில் கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்புத் திர்மானத்தின்போது பதிலளித்த வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை உள்விவகாரங்களில் மத்திய அரசால் தலையிட முடியாது; இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டுவருகிறது என்பதற்காக இந்தியாவும் அதைப் பின்பற்ற வேண்டிய அவசியம் கிடையாது என்று அதிரடியாகவே சொன்னார். தமிழக்தத்திற்கு வந்த மத்திய இணையமைச்சர் நாராயணசாமியும் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பாக இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை என்ற உண்மையைச் சொல்லிவிட்டு, பத்திரிகையாளர்களையும் தமிழர்களையும் தமிழர்களின் உணர்வையும் சமாளிக்கும் விதத்தில் கடந்தமுறை என்ன நிலைப்பாடு எடுக்கப்பட்டதோ அதுவே இப்போதும் மேற்கொள்ளப்படும் என்றார். கடந்தமுறை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைத் தி.மு.க. உள்ளிட்ட தமிழக கட்சிகளின் தொடர் அழுத்தத்தால் இந்தியா ஆதரித்தது என்றாலும், அதன் சாரத்தைக் குறைக்கும் வேலையையும் செய்தது என்கின்ற டெல்லி அதிகாரிகள், இந்தமுறையும் எப்படியாவது அமெரிக்கத் தீர்மானத்தின் வலிமையைக் குறைக்கும் வேலைகளில் இந்தியாவும் இலங்கையும் முழுமூச்சாக உள்ளன என்கிறார்கள்.

அவர்களிடம் மேலும் விரிவாகப் பேசிய போது,

இந்தமுறை தீமானம் நிறை வேற்றப்படுவது உறுதி. 47 நாடுகளின் முழு ஆதரவுடன் ஒரு மனதாக நிறைவேற்ற வேண்டும் என வல்லரசான அமெரிக்கா எதிர்பார்க்கிறது. ஒரு மனதாக நிறைவேற்றும்போது வாக்கெடுப்புக்கு அவசியம் இருக்காது. அதுதான் தனக்கு நல்லது என இந்திய அரசும் நினைக்கிறது. வாக்கெடுப்பு இல்லாத தீர்மானம் என்றால், ஆதரவா, எதிர்ப்பா என்ற தனது நிலையை இந்தியா வெளிப்படுத்த வேண்டியதில்லை. ஆனால், வாக்கெடுப்பு இல்லாத தீர்மானமாக இது நிறைவேறுவது, இலங்கையின் கையில்தான் உள்ளது. கடந்தமுறை தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி பல நாடுகளிடமும் இலங்கை *லாபி* செய்து தோல்வியடைந்தது. இந்த முறை, அப்படி *லாபி* செய்ய வேண்டியதில்லை என்றும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்ற அனுமதிப்பதே இப்போது தன்னைச் சூழ்ந்துள்ள அழுத்தத்தை எதிர்கொள்ள சரியான வழி என்றும் இலங்கை நினைப்பதாக டெல்லி அதிகாரிகள் கூறினார்கள்.

தீர்மானம் நிறைவேறினால் இலங்கைக்குத்தானே நெருக்கடி என்று கேட்டதற்கு, திர்மானத்தில் உள்ள அம்சங்களை நிறைவேற்ற இலங்கை அரசு பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறும் உலக நாடுகளும் அதனை அனுமதிக்கும். இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதால், தன்னுடைய பொறுப்பை நிறைவேற்ற அவகாசம் தேவை எனக் கோரும் ஐ.நா.விதிகளின்படி இதற்கும் அனுமதி கிடக்கும். இதற்கும் அனுமதி கிடைக்கும். அந்த அவகாச நேரம் என்பது அநேகமாக ஒன்றரை ஆண்டுகளாகக்கூட இருக்கலாம். இந்தக் கால இடைவெளியை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என மகிந்தராஜபக்ச நினைக்கிறார். அதற்கு இந்தியாவின் உதவியையும் நாடியிருக்கிறார். இந்தியாவும் இதைத்தான் விரும்புகிறது என விரிவாகவே விளக்கினர் வெளியுறவுத்துறை அதிகாரிகள்.

இந்திய வெளியுறவுத்துறை என்பது மற்ற துறைகளைப் போல அந்தத்துறை அமைச்சரின் கட்டுப்பாட்டில் உள்ளது அல்ல. ஆளுமை மிக்க அதிகாரிகளின் கண்ட்ரோலிலேயே உள்ளது. ஈழத்தமிழர்கள் பற்றி ஒருபோதும் கவலைப்படாமல் இலங்கையுடனான நட்புறவையே பெரிதாக நினைக்கும் அவர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள் என்ற தகவல் தலைநகர உயர் மட்டத்திலிருந்து கசிந்தது. அண்மையில் சுப்பிரமணியசாமி, இலங்கை சென்று மகிந்த ராஜ பக்சவை சந்தித்ததன் பின்னணியும் இதுதான் என்கிறார்கள். தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பது போன்ற வார்த்தைகளை வெளியிட வேண்டாம் என்றும், ஐ.நா. தீர்மானத்தைப் பொறுத்தவரை ஒரு கட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயல்படும் வாய்ப்பு உள்ளது என்றும் இலங்கை ஜனாதிபதியிடம் சாமி பேசியிருப்பதாகக் கூறுகிறார்கள். மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம், ஐ.நா. பொதுமன்றத்திற்குச் செல்லும். அங்கு நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள சீனா, ரஷ்யா போன்றவற்றின் துணை யுடன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்காமல் செய்யமுடியும் என்பதெல்லாம் ராஜபக்சவுக்கு இந்தியா அனுப்பியுள்ள தூது செய்திகளாம். தமிழக அரசியல் கட்சிகள் தங்களுடைய சொந்த நலன்களுக்காகப் பெயரளவில் போராட்டங்களை நடத்திக்கொண்டு தான் இருக்கும் என்பதே இந்திய அரசன் கணிப்பு. அவற்றை சமாதானப் படுத்தும் விதத்தில், ஒன்றிரண்டு தற்காலிக அறிவிப்புகளை மட்டும் வெளி யிட்டு விட்டு, நீண்டகால நோக்கில் இலங்கையைக் காப்பாற்றும் முயற்சிகளை இந்தய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று தலைநகர அதிகாரிகள் இந்திய அரசின் தற் போதைய செயற்பாடுகளை விரி வாகவே சுட்டிக்காட்டுகிறார்கள்.

நக்கீரன்

# ஓமந்தை சோதனை சாவடியை அகற்றுமாறு கோரிக்கை!

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள இராணுவ சோதனைச் சாவடி யுத்தத்தின் அடையாளமாக உள்ளது. இந்த சோதனைச் சாவடி அகற்றப்பட வேண்டும் என தான் அரசாங்கத்தை கோரவுள்ளதாக போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் சார்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு,

ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக வெளிநாட்டு உறவுகள் யாழ்ப்பாணம் செல்லும் போதும் ஏனையவர்கள் மற்றும் தென்இலங்கை பயணிகளும் அந்தச் சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுவது விசனத்தை ஏற்படுத்துகின்றது.

அங்கு திருட்டு போகும் பொருட்களை கண்டுபிடிப்பதற்காக சோதனையிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அது இராணுவ நிர்வாகத்தின் அடையாளமாகவே பார்க்கப்படுகின்றது. இதனை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இது ஒரே நாடு என்கின்ற அடையாளத்திற்கு இடையூறாக இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

அத்துடன் வயோதிபர்கள் வெளிநாட்டில் இருந்து வரும் வடக்கை தாயகமாகக் கொண்ட புலம் பெயர் மக்கள் இந்த இடத்தை கடக்கும் போது இரவு நேரங்களாக இருந்தாலும் இறக்கி பதிய வைக்கப்படுகின்றார்கள்.

அது வேற்று மனப்பான்மையுடன் நடத்தப்படுவதாக உணர்வதற்கு வழிவகுக்கும்

இதன் காரணமாக தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் இரண்டு நிர்வாகம் இடம்பெறும் பிரதேசத்திற்குள் சென்று வருவதாக எண்ணுகிறார்கள்.

எனவே அனைத்து இடங்களுக்கும் செல்வது போல் ஓமந்தையிலும் நடைபெறவேண்டும்.

தற்போது சிவில் நிர்வாக கட்டமைப்புக்கள் பலமடைந்துள்ள நிலையில் ஓமந்தை சோதனைச் சாவடி இதுவரை நடத்த யுத்தத்தின் அடையாளமாக உள்ளது என்று அவர் அதனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-11)

# இந்திய வாழ் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பு

## இலங்கை உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

இந்தியாவில் வாழும் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டதாக இலங்கை உயர்ஸ்தானிகரா்லயம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக தென்னிந்தியாவில் வாழ்கின்ற இலங்கையர்களுக்கு பொலிசார் கூடுதல் பாதுகாப்பு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் சில தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்களினால் இலங்கையர்களுக்கு பாதிப்பு கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இடம்பெற்ற போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களின் போதும் இந்தியப் பொலிசார் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அமைந்துள்ள இலங்கை நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு மத்திய அரசாங்கம் சாதகமான பதிலை அளிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இ.போ.ச. 787 ஆம் இலக்க பேருந்து சேவைகளை விரைவில் ஆரம்பியுங்கள் பயணிகள் கோரிக்கை

சேவையை முற்றாக நிறுத்தியுள்ள இ.போ.ச. 787 இலக்க பேருந்து சேவையை ஆரம்பிக்க வேண்டுமென இவ்வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். காரை நகரில் இருந்து யாழ்.நோக்கி பயணிக்கும் இ.போ.ச. 782 இலக்க பேருந்தில் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், நோயாளிகள், குழந்தைகள் என பல ஏராளமானோர் தமது அன்றாட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்றனர்.

787 இலக்க பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் போதியளவு இடவசதிகள் இன்றி மிகவும் அசௌகரியத்துடன் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையுள்ளது. இதனால் மாணவர்கள் தாமதித்தே பாடசாலை செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களை போன்று இலங்கைப் போக்குவரத்து சபையின் 787 என்ற இலக்கமுடைய பேருந்து சேவையில் ஈடுபட்டால் காலதாமதமின்றி போதியளவு இடவசதியுடன் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

மேலும் இவ்வீதிகளில் பய ணிக்கும் தனியார் பேருந்து வண்டிகள் பாடசாலை மாணவர்கள் பயணத்தை மேற்கொள்ள மறுப்பு தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் 782 இலக்கமுடைய இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை அதிகரிப்பதுடன் 787 ஆம் இலக்க பேருந்துகளையும் சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-17)

# ஆஸி.செல்ல முற்பட்ட 30 பேர் கைதாகினர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 30 பேரை இலங்கைக் கடற்படையின்ர் கைது செய்துள்ளனர்.

மாத்தறை வெலிகம பிரதேசத்தில் வைத்து குறித்த சட்டவிரோத அகதிக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகு ஒன்றின் மூலம் குறித்த நபர்கள் அவுஸ்திரேலியா நோக்கிய பயணத்தை ஆரம்பித்திருந்ததாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அகதிக் கோரிக்கையாளர்கள் காலி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்களவர்களே மீள்குடியமர்வு

## அரசாங்கம் அறிவிப்பு

வடக்கில் சுமார் 15 ஆயிரம் மக்கள் மீள்குடியேற்றப்படுவர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் குறித்த பிரதேசத்தை விட்டு வெளியேறியவர்களே இவ்வாறு மீள் குடியேற்றப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனை சிங்களமயமாக்கும் முயற்சியாகக் கருதக் கூடாது என சுட்டிக்காட்டியுள்ளது.

இவர்கள் வெலிஓயா, பதவியா மற்றும் வவுனியா தெற்கு ஆகிய பகுதிகளிலேயே மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடக்கில் மீள்குடியேற்றப்படவுள்ள சிங்களவர்களுக்காக 850 வீடுகளை அரசாங்கம் நிர்மாணிக்கவுள்ளது என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச தெரிவித்துள்ளார். மீள்குடியேற்ற நடவடிக்கைகளை எப்போதும் முழுமையாக பூரணப்படுத்த முடியும் என்பதனை உறுதிபட்க் குறிப்பிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




★ 1847-ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜெனரல் வின்ஃபீல்ட் ஸ்கொட் தலைமையில் மெக்சிக்கோவைத் தாக்கினர்.

★ 1919-எகிப்தில் 1919 ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர் அமெரிக்க பி-29 போர் விமானங்கள் டோக்கியோவில் குண்டுகளை வீசியதில் ஏற்பட்ட தீச்சூறாவளியினால் ஒரு இலட்சம் பேர் உயிரிழந்தனர்.

★ 1956-ஜோர்ஜியாவில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் எதிர்ப்பு போராட்டம் சோவியத் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது.

★ 1957-அலாஸ்காவில் அண்டிறியானொவ் தீவுகளில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பலத்த சேதமும் ஆழிப் பேரலையும் ஏற்பட்டது.

★ 1959-பார்பி பொம்மை முதன்முதலாக விற்பனைக்கு வந்தது.

★ 1986-சலேஞ்சர் விண்ணோடத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கிய அமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டுபிடித்தனர். இறந்த ஏழு விண்வெளி வீரர்களினது உடல்கள் உள்ளே இருந்தன.

★ 2006-சனியின் துணைக்கோளான என்செலாடசில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1923-வால்ட்டர் கோன், நோபல் பரிசுபெற்றவர்.

★ 1934-யூரி ககாரின் விண்வெளி சென்ற முதலாவது மனிதர் (இ.1968)

★ 1943-பாபிஃபிஷர், அமெரிக்க சதுரங்க மேதை (இ.2008)

### இறப்புக்கள்

★ 1974-ஏர்ல் சதர்லாண்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1915)

★ 1983-ஊல்ஃப்வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1905)

★ 1992-மெனாச்சிம் பெகின், இஸ்ரேலியப் பிரதம,ர் நோபல் பரிசுபெற்றவர் (பி.1913)

★ 1997-நொடோரியஸ் பி.ஐ.ஜி, ராப் இசைக்கலைஞர் (பி.1972)

### யூரி ககாரின்



யூரி ககாரின் மொஸ்கோ மாநகருக்கு மேற்கே ஸ்ஸாட்ஸ்க் பகுதியில் உள்ள குளுஷினோ என்னும் இடத்தில் 1934 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி பிறந்தார். இப்பகுதி பின்னர் ககாரின் எனப் பெயரிடப்பட்டது.

இவரது பெற்றோர் கூட்டு விவசாயப் பண்ணை ஒன்றில் கடமையாற்றினார்கள்.

யூரி சரடோவ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்பயிற்சி பெற்றுஅங்கு மென்விமான ஓட்டுநராக பகுதி நேரங்களில் பயிற்சி பெற்றார். 1955 ஆம் ஆண்டு ஒரென் பூர்க் விமான ஓட்டுநர் பாடசாலையில் இணைந்து மிக் -158 போர் விமான ஓட்டுநராக பயிற்சி பெற்று வெளியேறினார்.

அவரது முதல் பணி நோர்வே எல்லையிலுள்ள மூர்மன்ஸ்க் பகுதியில் உள்ள இராணுவ விமானத்தளத்தில் ஆரம்பமானது.

1960 ஆம் ஆண்டு மனிதனை விண்ணுக்கு அனுப்பும் சோவியத் விண்வெளித் திட்டத்தில் இணைந்து கொண்ட 20 விண்வெளி வீரர்களில் யூரி ககாரினும் ஒருவராவார்.

சிறப்புப் பயிற்சிக்குப் பின்னர் ககாரின், கெர்மன் டீட்டோவ் ஆகிய இருவரும் விண்வெளிப் பயணத்திற்குத் தெரிவானார்கள் .

இவர்களில் ககாரின் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பீடத்தில் விண்வெளியில் பயணிக்கும் முதல் மனிதராக அனுப்புவதற்காகத் தெரிவு செய்யப்பட்டார்.

ககாரின் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி வஸ்தோக் விண்கலத்தில் பயணித்து முதன் முதல் பூமியை வலம் வந்தார். அவரது விண்கலம் 1.48 மணி நேரம் பறந்தது.

உலகின் விண்வெளிக்கு சென்ற முதல் மனிதன் என்ற பெயரை பெற்ற யூரி ககாரின் 1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி தன்னுடைய 34 ஆவது வயதில் மரணத்தை தழுவிக் கொண்டார்.

# தமிழக மீனவர்கள் மீது தொடரும் தாக்குதல்; இலங்கை இப்போதும் நட்பு நாடுதானா?

## தொல்.திருமாவளவன் ஆவேசம்!



(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் அட்டூழியங்களுக்கு தொல்.திருமாவளவன் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கோடியாக்கரைக்கு அருகே இந்தியக்கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் மீனவர் ஒருவர் படுகாயம் அடைந்திருக்கிறார்.

அத்துடன் படகுகள் நாசமாகியிருக்கின்றன. இரண்டொரு நாட்களுக்கு முன்புதான் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை பிடித்துச் சென்று சிறையில் அடைந்துள்ளது. அவர்களை உடனே விடுவிக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகள் கூறிய பின்னரும் இதுவரை இலங்கை அரசு அதை மதிக்கவில்லை.

இந்நிலையில் மீண்டும் தமிழக மீனவர்கள் மீது அத்துமீறி இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறது. ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக மாநிலங்களவையில் விவாதம் நடந்த போது இலங்கை, இந்தியாவின் நட்பு நாடு என்று நமது வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக அந்தப் பேச்சு இருந்தது. இலட்சக் கணக்கில் ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டது போதாதென இந்தியத் தமிழ் மீனவர்கள் மீதும் இலங்கை அரசு தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தியாவுக்கு உரிமையான கச்சதீவை ஒப்பந்தத்துக்கு மாறாக இலங்கை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவுக்குப் பின்னரும் இலங்கை ஒரு நட்பு நாடு என்று இந்தியா சொல்து நமக்குப் புரியாத புதிராகவே உள்ளது.

இந்திய இராணுவ வீரர் ஒருவரை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தி தெரிந்து இந்தியாவே கொந்தளித்தது.

பாகிஸ்தானுடன் போர் மூளக்கூடும் என்ற அளவுக்கு இந்திய அரசின் நடவடிக்கைகள் கடுமையாக இருந்தன. ஆனால், 500 இற்கும் மேற்பட்ட அப்பாவி இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் படுகொலை செய்யப்பட்டபோதும் இந்திய அரசு தொடர்ந்து மௌனம் காத்து வருகிறது.

படுகொலை செய்யப்படுபவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் இப்படி பாராமுகமாக இருக்கிறார்களாக ஏன்ற கேள்வி தமிழக மக்களிடையே எழுந்துள்ளது. இதற்கு இந்திய அரசு விளக்கமளிக்க வேண்டும். இப்போதும் இலங்கை இந்தியாவின் நட்பு நாடுதானா என்பதை இந்தியப் பிரதமர் தெளிவுபடுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# உதைபந்தாட்டப் போட்டி

(மானிப்பாய்)

தெல்லிப்பழை இளைஞர் கழக சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பங்கு பற்றும் அணிகள் குறித்த நேரத்திற்கு முன்னர் சமுகம் தருவதோடு மேலதிக தகவல் தேவைப்படின் இளைஞர் சேவை அதிகாரியோடு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-23)

# நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையின் அங்குரார்ப்பண கூட்டமும் பரிபாலன சபை புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இப் புதிய நிர்வாகத் தெரிவின் பிரகாரம் தலைவராக க.பரானந்தன், செயலாளராக பே. சுசியந்தன், பொருளாளராக வை.கெங்காதரன் ஆகியோரும் உபதலைவராக க.பாவேந்தன், உப செயலாளராக ப.ரவிச்சந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக வி.ஜெனார்த்தனன், வீ. சோமசுந்தரம், ஆ.ஸ்ரீபத்மராசா, கு.க. நடராசா, க.சிவராசா, ந.நடேசமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-5)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவர் கைது!

மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட இருவர் கொடிகாமப் பொலிஸாரினால் கடந்த புதன்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்விருவரும்கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

உழவியந்திரத்தை மதுபோதையில் செலுத்தி வந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட நபரும் மதுபோதையில் முச்சக்கர வண்டி செலுத் திய தாக குற்றச்சாட்டப்பட்ட நபருமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் நீதமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகள் எனக் கண்டு உழவியந்திரம் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மூன்று மாதத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரம் தடை செய்யப்பட்டது.

அத்துடன் முச்சக்கர வண்டி செலுத்திய நபருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இன்மையாலும் மதுபோதையில் வாகனம் செலுத்தியமையாலும் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (செ-3-85)

# சிவராத்திரிக்கு மறுநாள் பாடசாலைகளில் விடுமுறை

## 16 ஆம் திகதி சனிக்கிழமை பதில் பாடசாலை

(கொழும்பு)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 11 ஆம் திகதியன்று சகல இந்து பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்குமாறு கல்வியமைச்சு பணிப்புரை விடுத்துள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலர் எஸ்.எம்.கோதபய ஜயரத்ன, மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்த விடுமுறை தினத்தை 16 ஆம் திகதி சனியன்று பாடசாலையை நடத்தி ஈடுசெய்து கொள்ளலாம் என்றும் செயலர் மேலும் அறிவித்துள்ளார்.

சிவராத்திரி தினத்தையொட்டி மார்ச் 10 ஆம் திகதி மாலை 6 மணியிலிருந்து 11 ஆம் திகதி பகல் 12 மணிவரை மத நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதால் பாடசாலை மாணவர்களுக்கு 11 ஆம் திகதி விடுமுறை வழங்க வேண்டுமென அமைச்சர் கேட்டிருந்தார். பாடசாலை விடுமுறை தொடர்பாக சகல இந்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்குமாறும் செயலர் கூறியுள்ளார்.

இந்து மதத்தினரின் விசேட சமய நிகழ்வான மகா சிவராத்திரி உற்சவத்தின் நிமிர்த்தம் நிகழும் சமய நிகழ்ச்சிகள் யாவும் சிவராத்திரி தினம் விடியற்காலை தொடங்கி மறுதினம் பகல் 12 மணிவரை இடம்பெறுவது இந்து சம்பிரதாயத்தின் அம்சங்களில் ஒன்றாகும். (அ-2)

# கடந்த வாரத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 163 பேர் பொலிசாரால் கைது

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 163 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

அவற்றில் மது போதையில் கலகம் விளைவித்த 02 பேரும்,. பிறருக்கு அடித்து காயம் ஏற்படுத்திய 40 பேரும், பண மோசடியில் ஈடுபட்ட ஒருவரும், சந்தேகத்தின் பேரில் 24 பேரும் பொது இடங்களில் மது அருந்திய 10 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 11 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய 07 பேரும், பொது இடத்தில் கலகம் விளைவித்த 03 பேரும், சட்டவிரோத மின்சாரம் பெற்ற 05 பேரும், சட்டவிரோத மது விற்பனை செய்த 03 பேரும், பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 48 பேரும், காசோலை மோசடி விபத்தினை ஏற்படுத்தியமை, திருட்டு பொருட்களினை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் தலா ஒவ்வொருவரும், திருட்டில் ஈடுபட்டமை, சமாதானத்திற்கு சீர்குலைவினை ஏற்படுத்தியமை அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் தலா இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 88 பேர் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள்ளும் 75 பேர் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள்ளும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றங்களின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை பொலிஸாரின் வாராந்த கைது கணிப்பீட்டின்படி அடிதடி சம்பந்தமான கைதுகளும் மதுபோதை சம்பந்தமான கைதுகளும் தொடர்ச்சியாக முதலிடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## சிங்கராஜவனத்தில்

# இயற்கை மற்றும் பறவைகள் ஆய்வு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இலங்கை களப்பறவையியல் குழு விலங்கியல் துறையின் வழிகாட்டலின் டில்மா கென் சவேசனின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் சிறுவர் மகிழ்வகமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள ஆய்வு முகாம் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை சிங்கராஜவனத்தில் இடம்பெறவுள்ளது என கோப்பாய் சிறுவர் மகிழ்வக இணைப்பாளர் ஸ்ரீ கஜேந்திரன் தெரிவித்துள்ளார். இவ் ஆய்வு முகாம் கொழும்பு பல்கலைக்கழக இலங்கை களப்பறவையியல் குழுவின் காப்பாளரும் இலங்கை விஞ்ஞான சங்கத் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியருமான சரத் கொட்டகமவின் நெறிப்படுத்துதலில் இடம் பெறுகின்றது. இம்முறை சிங்கராஜவனத்தில் நடைபெறும் இயற்கை மற்றும் பறவைகள் ஆய்வு முகாமில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சிறுவர் மகிழ்வக இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)



இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூடின் 40 ஆவது ஆண்டு மாணிக்க விழா அண்மையில் நடைபெற்றது. இதன் போது...

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் 99 வீதம் நிறைவேற்றப்பட்டுள்ளன

## அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

தமிழர்களை மீள்குடியமர்த்துதலில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் நல்லிணக்கக் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் 99 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில்நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க பங்கேற்று உரையாற்றி விட்டு கொழும்பு திரும்பியிருந்தார்.

இந்நிலையில்அவர்நேற்று முன்தினம்கொழும்பில்வைத்து பேட்டி அளித்துள்ளார்.

இலங்கை அரசு நியமித்த போருக்கு பிந்திய படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை பேரவை கூட்டத்தில் நான் கலந்து கொண்டு தெரிவித்த உண்மைக் கருத்துக்கள் அந்த பேரவையினாலும் உறுப்பு நாடுகளாலும் மிகுந்த கவனமுடன் ஆராயப்படும் என நம்புகிறேன்.

போருக்கு பிந்திய படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க குழு செய்த பரிந்துரைகள் ஏற்கனவே 99 சதவீதம் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து நாங்கள் எந்த ளவுக்கு பணிகளில் முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதை கண்டறியுமாறு கூறினேன்.இலங்கையின்உண்மை நிலைவரத்தை எனது உரையின் போது தெரிவித்தேன்.

எனது உரை தேவையான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும் என நம்புகிறேன். யாரேனும் ஒரு சார்பாக செயற்படாமல் பாரபட்சமின்றி நடக்கிறவர்களாக இருந்தால் அவர்கள் எனது உரையின் நியாயத்தை உணர்வார்கள்.

போரினால் இடம் பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்துவதில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

# மகளிர்தின நிகழ்வுகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் கலந்துரையாடல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் வன்முறையற்ற வாழ்வை நோக்கி, பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சாத்தியமான தீர்வுகளும், சுயாதீனமான பெண்கள் அமைப்பின் தேவை என்ற கருப்பொருளிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (அ-5)

* * * * *

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் கரைச்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் சர்வதேவ மகளிர் தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வ ரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திருமதி வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது விருது வழங்கி கௌரவித்தல், கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-3-254)

# மனித உரிமைகள் தொடர்பில் மேற்குலகுக்கு கற்பிக்க தயார்

## பிரதம நீதியரசர் மொஹான் தெரிவிப்பு

மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் கற்றுக் கொடுக்கும் வல்லமை இலங்கையிடம் காணப்படுவதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஜெனீவாவில் இலங்கைக்கு மனித உரிமைகள் குறித்து பாடம் கற்பிக்க முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.மனித உரிமை விவகாரங்கள் குறித்து கட்டளைகளை பிறப்பிக்க அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரே குறித்த நாடுகள் மனித உரிமைகள் பற்றி பேசுவதாகவும் இலங்கை 2 ஆயிரத்து 500 செழுமையான வரலாறு காணப்படுவதாகவும் மனித உரிமை தொடர்பில் நீண்ட வரலாறு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்றும் மனித உரிமைகள் குறித்து அமெரிக்காவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் பாடம் கற்பிக்கும் வல்லமை இலங்கையிடம் காணப்படுவதாக பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சிவராத்திரி விழா

(பூந்தோட்டம்)

வவுனியா கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயத்தின் மகா சிவராத்திரி பெருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

அபிசேக ஆராதனைகளுடன் காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் பூஜை வழிபாடுகளை அடுத்து நான்கு கால பூசைகளும் அர்ச்சனைகளும் இடம்பெறும்.

இதன்போது விசேட சிறப்புரைகளும் அருளுரைகளும் நாடகம், நாட்டியம், இசை வேள்வி போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இவ்விழாவில் கலந்து கொள்வதற்கு அடியவர்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-266)

* * * * *

(சிவநகர்)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

நான்கு சாமப்பூசைகளும் மூன்றாம் சாமப்பூசையில் லிங்கோற்சவ அபிஷேக பூசையும் நடைபெற்று கிளிநொச்சி திருநெறி கழகத்தினால் வருடாந்தம் நடைபெறும் மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளன.

மேலும் இவ் ஆலயத்தின் இராஜகோபுர நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (அ-3-254)

# மீன்பிடி செயற்றிட்டத்திற்கு 8.2 மில்லியன் நன்கொடை

மன்னார் மீன்பிடி செயற்றிட்டத்தின் மேம்பாட்டிற்காக ஜப்பானிய அரசாங்கம் 8.2 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹோபோ மற்றும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நிமல் சந்திரரட்ண ஆகியோர் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆலோசகர் ரஜீவ விஜேசிங்க முன்னிலையில் இதற்கான ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் மீன்பிடி செயற்திட்டத்திற்கு அவசியமான கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் மீன் பிடித்தலுக்கு தேவையான பயிற்சி வழங்குவதற்கான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அபிவிருத்திகள் மேற் கொள்ளப்படவுள்ள குறித்த மீனின விருத்தி நிலையம் வருடமொன்றுக்கு 2 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுவதனை இலக்காகக்கொண்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக்குளத்திலும்மற்றைய குளங்களிலும் விடப்படும்.

இச்செயற்றிட்டத்தின்மூலம் 108 மீனவர்கள் நேரடியாகவும் 7 ஆயிரம் மீனவர்கள் மறைமுகமாகவும் நன்மையடைவர். (அ-2)

# தண்டப்பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச(வ) 2004, 2005, 2006, 2007 இளைப்பாறிய ஊழி யர்களது பணிக் கொடை தண்டப்பணக் கொடுப்பனவு தொடர் பாக நீதவான் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்தவர்களை நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு இ.போ.ச(வ) தலைமைக் காரியாலயத்திற்கு தேசிய அடை யாள அட்டை மற்றும் வங்கிப் புத்தகத்துடன் தண்டப் பணக் கொடுப்பனவு பெறுவதற்காக தவறாது சமூகம் கொடுக்குமாறு பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார். (அ)


## 14 ஆம் ஆண்டு நினைவலைகள் — முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சண்முகம் இராமலிங்கம்**

(பொன்னப்பா - சாரதி)

மலர்வு: 14.02.1929

உதிர்வு: 19.02.1999



**அமரர் இராமலிங்கம் அருள்நிதி**

மலர்வு: 29.06.1979

உதிர்வு: 20.02.2012

ஓராண்டு ஆனாலும் எங்கள்
விழிகள் காயவில்லை
தோளிலும் இடுப்பிலும் சுமந்து
எமை போற்றி வளர்த்த சித்தியே
ஓயாது தேடுகின்றோம் - உன்
பூவதனம் காண்பதற்கு
பல யுகம் கழிந்தாலும் மறவோம்
உம் நினைவுகளை

**பிரிவால் துயருறும், குடும்பத்தினர்**

செங்குந்தா வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(சி-2613)


# ஐ.நாவுடன் தொடர்புகொள்ள பல்வேறு வழிகள் உள்ளன

## மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கீ தெரிவிப்பு

கடத்தப்பட்ட மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பில் வடக்கு மக்கள் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு கிளையில் முறைப்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளரின் பேச்சாளர் மார்டின் நெசர்கீ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் தொடர்பு கொள்வதற்கு வேறு பல்வேறு வழிகள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கடத்தப்பட்ட காணாமல் போனோரின் உறவினர்களினால் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்வதற்காக வவுனியாவிலிருந்து புறப்பட்ட மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளிக்க திட்டமிட்டிருந்தனர்.

கொழும்பு கிளையின் ஊடாக மட்டும் தகவல்களையோ முறைப்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பூமிராசா லபிதா**

தோற்றம்: 1968.08.11

மறைவு: 2009.03.09

நான்கு ஆண்டுகள் கடந்தபோதும்
நீங்காத நினைவுடனே நாம் இன்று
நம் குல விளக்கே நாம் மகிழ்ந்திருக்க வருவீரோ உன் உருவம்
மின்னலென அடிக்கடி நம்மைவாட்டிவிட்டு ஆனந்த
பேற்றினை தேடியதேன் மீண்டும் எங்கள்
வாசலிற்கு வருவாயோ?

தகவல் : கணவர் த.பூமிராசா
பிள்ளைகள்
கோபினாத், கோகிலாத், லோஜினி

பாலி நகர்,
வவுனிக்குளம். (2114)

# சாவேசின் பூதவுடல் அருங்காட்சியகத்தில்

(கராகஸ்)

மறைந்த வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி ஹியூகோ சாவேசின் பூதவுடல் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுமென அந்நாட்டின் துணை ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அறிவித்துள்ளார்.

வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி கடந்த 5 ஆம் திகதி காலமானார்.

இதனையடுத்து அவரது பூதவுடல் கண்ணாடி பெட்டியில் வைக்கப்பட்டு தேசிய கொடி போர்த்தப்பட்டு ஊர்வலமாக இராணுவ அக்கடமிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்வலம் சென்ற 8 கிலோ மீற்றர் தூரத்துக்கு வழி நெடுக திரண்டு நின்று மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அவரது உடல் இராணுவ அகடமியில் அரசு சார்பில் மரியாதைக்காக வைக்கப்பட்டது.

அங்கு ஆர்ஜென்டினா, பொலிவியா, உருகுவே ஆகிய நாட்டு ஜனாதிபதிகள் தமது இறுதி அஞ்சலியினைச் செலுத்தினர். ஆயிரக்கணக்கான பொதுமக்களும் 10 மணி நேரம் வரிசையில் காத்து நின்று அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சாவேஸ் இறுதி சடங்கு நேற்றையதினம் நடைபெற்றது. லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளைச் சேர்ந்த 30 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது சார்பில் பிரதிநிதியை அனுப்பி வைத்துள்ளார்.

இறுதி சடங்குகள் முடிந்ததும் சாவேஸ் உடல் வாசனை திரவியங்கள் மற்றும் மூலிகைகள் பூசி பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இதை தொடர்ந்து மேலும் 7 நாட்களுக்கு அடக்கம் செய்யாமல் அங்குள்ள அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

ரஷ்யத் தலைவர் லெலின், சீனத் தலைவர் மாவோ ஷிடாங் ஆகியோரின் உடல்களை இது போன்று பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்தியாவிற்கு 6 ஆவது இடம் வழங்கிய அமெரிக்கர்கள்

அமெரிக்கர்கள் அதிகம் விரும்பும் தேசங்களின் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அமெரிக்காவில் தனியார் அமைப்பு ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் பங்கேற்றவர்களில் 68 சதவிகிதம் பேர் இந்தியாவை அதிகம் விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

10 பேரில் 7 பேர் இந்த கருத்தை கூறியுள்ளனர். அமெரிக்கர்கள் அதிகம் விரும்பும் தேசங்களின் பட்டியலில் கனடா, பிரிட்டன், ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன.

இந்த கருத்துக் கணிப்பில் அமெரிக்கர்களுக்கு பிடிக்காத நாடுகளின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளன. அமெரிக்கர்கள் அதிகம் விரும்பாத நாடுகளின் பட்டியலில் ஈரான் முதலிடம் பிடித்துள்ளது.

10 பேரில் 9 பேர் இந்த நாட்டுக்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளனர். இந்த பட்டியலில் தென்கொரியா இரண்டாம் இடமும் பாகிஸ்தான் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

பாகிஸ்தானுக்கு எதிராக 81 சதவிகிதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

வாக்களித்தவர்களில் 10 பேரில் 8 பேர் பாகிஸ்தானுக்கு எதிராக கருத்து கூறியுள்ளனர். இந்த பட்டியலில் லிபியா, ஈராக், ஆப்கானிஸ்தான், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன. (அ-2)

# ஒசாமாவின் உறவினர் கைது; அமெரிக்கா



அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் மறைந்த தலைவர் ஒசாமா பின்லேடனின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுலைமான் அபு காயித் என்ற பெயருடைய இவர், ஒசாமாவின் மருமகன் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இவர் கைது செய்யப்பட்டு, அமெரிக்கா கொண்டு வரப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த கைது, பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஒரு முக்கிய மைல்கல் என்றும் அவரை நியூயோர்க் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)

# சீனாவில் அசுத்தமான குடிநீரை 298 மில்லியன் மக்கள் பருகுகின்றனர்



சுற்றுச் சூழல் மிக மோசமாக பாதிப்படையும் உலகின் 20 நகரங்களில் 16 நகரங்கள் சீனாவில் உள்ளதாக உலக வங்கியின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

சுற்றாடல் மாசு காரணமாக சீனாவின் நிலத்தடியில் உள்ள 57 வீதமான நீர் மாசடைந்துள்ளதாக அண்மையில் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் 298 மில்லியன் மக்கள் அசுத்தமான நீரையே அருந்துகின்றனர். இதன் காரணமாக அனைவருக்கும் சுத்தமான குடிநீர் என்ற ஐந்தாண்டு திட்டத்தை சீனா நடைமுறைப்படுத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உரத்து சிரித்தவருக்கு ஒருமாத சிறைத்தண்டனை

அமெரிக்காவில் சத்தமாக சிரித்தவருக்கு ஒருமாத கால சிறை தண்டனை நீதிமன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரை சேர்ந்த ராபர்ட் சியாவெல்லி என்பவர் சத்தம் போட்டு பலமாக சிரிப்பது தலை வலியை ஏற்படுத்துவதாக அயல் வீட்டுக்காரர் புகார் அளித்தார்.

இந்த மனுவை விசாரித்த நியூயோர்க் நீதிமன்றம், ராபர்ட்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது. அபராத தொகை செலுத்த தவறினால் ஒரு மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து, ராபர்ட்டின் வழக்கறிஞர் ஆண்ட்ரூ காம்பனெல்லி கூறியதாவது,

ராபர்ட்டுக்கு, நரம்பு பாதிப்பு மற்றும் வலிப்பு நோய் உள்ளது. இதை அயல் வீட்டுக்காரர் கேலி செய்து வந்தார். மென்மையான குணம் கொண்ட ராபர்ட் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவே, அயல் வீட்டுக்காரரை பார்த்து சிரித்தார். இதற்காக, அவருக்கு, சிறை தண்டனை விதிப்பது அபத்தம். இவ்வாறு, ஆண்ட்ரூ கூறினார். (அ-2)

# உலகிலேயே மிக உயரமான புத்தர் சிலை சீனாவில்

உலகிலேயே உயரமான புத்தர் சிலையொன்று சீனாவில் திறக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஜியாங்ஷியில் உள்ள டோங்ளின் கோவிலில் உலகிலேயே உயரமான அமிதாப புத்தர் சிலை திறக்கப்பட்டுள்ளது. மொத்தம் 800 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வெண்கல சிலை 48 மீற்றர் உயரம் கொண்டது. பொதுமக்கள் கொடுத்த நன்கொடை மூலம் இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

உலகெங்குமுள்ள புத்தர் சிலைகளில் அமிதாப புத்தர் என்ற ஒரு வகை சிலையும் ஒன்று. புத்தமத பிரிவான வஜ்ராயன பௌத்தத்தின் ஐந்து புத்தர்களில் அமிதாப புத்தர் ஒருவர் என கருதப்படுகிறது. (அ-2)

# சர்வதேச வாக்கெடுப்பில் சோனியாவுக்கு முதலிடம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அதிகம் புகழ்பெற்ற 20 பெண்களின் பட்டியலில் காங்கிரஸ் தலைவர் சோனியா முதல் இடத்தில் உள்ளார்.

இப்பட்டியலில் பெப்சிகோ தலைவர் இந்திரா நூயி, நடிகை ஐஸ்வர்யா ராய், நடிகை வித்யா பாலன், ஒலிம்பிக் பதக்கம் வென்ற மேரி காம், பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நெய்வால் ஆகியோரும் உள்ளனர்.

வாழ்க்கை அறிவியல் துணை தலைவர் ஸ்வாதி பிராமல் 12ஆவது இடத்திலும், சாய்னா நெய்வால் 9ஆவது இடத்திலும், நடிகை சபானா ஆஸ்மி 13ஆவது இடத்திலும், லோக் சபா எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் 16ஆவது இடத்திலும், தமிழக முதல்வர் ஜெயலலிதா 17ஆவது இடத்திலும், மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜீ 18ஆவது இடத்திலும், லோக்சபா சபாநாயகர் மீரா குமார் 19ஆவது இடத்திலும், எம்.பி., டிம்பிள் யாதவ் 20ஆவது இடத்திலும் உள்ளனர். (அ-2)

# தோல்விகளை வெற்றிப்படிகளாக்கி புதிய சரித்திரம் படைத்திடுங்கள்

## மகளிர் தினவாழ்த்து செய்தியில் தமிழக முதல்வர்

பெண்ணின் உயர்வினை உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டு உள்ள மகளிர் தின வாழ்த்து செய்தியில், இந்த இனிய நாளில் அனைத்து மகளிருக்கும் எனது உளங்கனிந்த மகளிர் தின நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்நாட்டிலே என்று பாடிய மகாகவி பாரதியார் பிறந்த இந்த இந்திய திருநாட்டில், பெண்கள் சோதனைகளை உறுதியுடன் எதிர்கொண்டு, தோல்விகளை வெற்றிப்படிகளாக்கி, புதிய சரித்திரம் படைத்திட எழுச்சியுடன் வீறுநடை போட இந்த இனிய நாளில் உறுதியேற்போம்.

அறிவுக்கண் திறந்து, ஆக்கபூர்வமாய் பணியாற்றி, உலகை வாழ வைக்கும் பெண்ணாக அனைத்து மகளிரும் உயர்ந்து விளங்கிட வேண்டும் என்று கூறியுள்ளார். (அ-2)

# இந்தியாவில் பயங்கர தாக்குதல்; ஜெய்ஷ் தீவிரவாதிகள் மிரட்டல்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவில் பயங்கர தாக்குதல்கள் நடத்துவோம் என்று ஜெய்ஷ்-இ-முகம்மது தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பாகிஸ்தானில் இருந்து செயற்படும் ஜெய்ஷ்-இ-முகம்மது தீவிரவாத இயக்கத்தின் முன்னாள் தலைவரும் அல்கொய்தா கமாண்டர்களில் ஒருவரான அஸ்மதுல்லா குவாவியா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இந்தியாவில் மிகப் பெரிய அளவிலான தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளோம் எங்கள் கவனம் எப்போதும் காஷ்மீர் பக்கம்தான் உள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகள் வெளியேறியதும் எங்களின் கவனத்தை காஷ்மீரில் மீது திருப்புவோம். அதற்காக மிகப்பெரிய தாக்குதலை நடத்துவோம்.

எங்களைப் போன்ற இயக்கங்களை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயால் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் எங்களைப் போன்ற இயக்கங்களை ஆதரித்து அவற்றை வழி நடத்தியதே ஐ.எஸ்.ஐ உளவு அமைப்புத்தான். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு இந்திய பாராளுமன்ற வளாகத்தில் தாக்குதலை நடத்திய சம்பவத்தில் தூக்கிலிடப்பட்ட அப்சல்குருவையும் 2008 ஆம் ஆண்டு மும்பை தாக்குதலில் ஈடுபட்டு தற்போது தூக்கிலிடப்பட்ட அஜ்மல் கசாப்பையும் அவர் வெகுவாக பாராட்டியுள்ளார். (அ-2)

# பிரான்ஸின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அரசியலுக்கு வருவேன்

## முன்னாள் ஜனாதிபதி சர்கோசி

பிரான்ஸின் பொருளாதாரத்தைச் சீர் செய்யவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் அரசியலுக்கு வரத் தான் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சர்கோசி தெரிவித்துள்ளார்.

வலதுசாரி ஆதரவுடைய ஊடகத்திற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத் தழுவிய சர்கோசி அரசியலை விட்டு விலகப்போவதாகத் தெரிவித்தார்.

ஆனால் கடந்த ஒக்டோபர் மாதம் தான் திரும்ப அரசியலுக்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

இது குறித்து சர்கோசி ஊடகத்தினருக்கு அளித்த பேட்டியில் கூறுகையில், பிரான்ஸ் என்பதால் திரும்ப வருவேன் என்றும் பதவி ஆசையால் வரவில்லை நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்வது எனது கடமையாக கருதுவதால் வருகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இதை தொடர்ந்து தானும் ஜேர்மனி பிரதமரும் யூரோ மண்டல நெருக்கடியைப் நீக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளை ஹோலாண்ட் தொடராமல் விட்டுவிட்டார்

மாலிப் பிரச்சனையில் பிரான்சை விட மூன்று மடங்கு பெரிய பகுதியை 4000 படை வீரர்களைக் கொண்டு கைப்பற்ற நினைத்தது அறிவுபூர்வமானதல்ல எனவும் சர்கோசி ஹோலாண்டின் செயல்களை விமர்சித்துள்ளார். (அ-2)

ஒழுக்கம், நாணயம், நேர்மை, பிறருக்கு உதவுதல் போன்ற பண்புகளை பின்பற்றுவதே மாணவர்களை உயர்ந்தவராக்கும். – *தந்தை பெரியார்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாணவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்

ஒரு காலத்தில் ஆசிரியத் தொழில் மரியாதைக்குரிய தொழிலாக இருந்தது. ஆனால் இன்று ஆசிரியத் தொழில் வேண்டாமென்றாயிற்று.

இதற்கான காரணங்கள் பலவாயினும் அதில் பலமான காரணமாக சமகால மாணவர்களின் மன நிலையை, அவர்களின் செயற்பாட்டை குறிப்பிடலாம்.

ஆம், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள், தாங்கள் மாணவர்கள் என்பதை முழுமையாக மறந்து செயற்படுவதுடன் மாணவர் ஒழுக்கம் என்பதையும் உதாசீனப்படுத்துகின்றனர்.

எல்லா மாணவர்களையும் இதற்குள் அடக்கிவிட முடியாதாயினும் உயர் வகுப்பு மாணவர்களில் வரும்பாலானவர்கள், ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பதாக தெரியவில்லை.

மாணவர்களின் உரிமைகள் தொடர்பான அமைப்புகளும் சட்டங்களும் அவர்களுக்கு சாதகமாக இருப்பதன் அடிப்படையில், மாணவர்களின் எல்லை மீறல்கள் அதிகரித்து வருகின்றன.

உயர் வகுப்பு மாணவர்களை கட்டுப்படுத்தவோ அல்லது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ முடியாது என்றளவில் ஆசிரியர்கள் ஒதுங்கிக் கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலையும் உருவாகியுள்ளது.

இந் நிலைமை நீடிக்குமாக இருந்தால்–நமக்கேன் தேவையில்லாத வேலையென்று ஆசிரியர்கள் நினைத்தால் நிலைமை படுமோசமாகிப் போகும்.

எனவே மாணவர்கள், அதிலும் குறிப்பாக க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்கள் சுய ஒழுங்கு கட்டுப்பாடு தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

தங்களைத் தாங்கள் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆசிரியர்களுக்கு கௌரவம் கொடுக்க முடியும் என்ற உண்மையை மாணவர்கள் தெரிந்து கொள்வது அவசியம். இதற்கு மேலாக துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெறும் போது மாணவர்கள் வீதியில் இறங்கி ஆடிப்பாடுவதோ அல்லது பொது மக்களிடம் நிதி சேகரிப்பதோ மாணவர்கள் என்ற உயர்ந்த பருவத்துக்கு அழகல்ல.

மாணவப் பருவத்தில் எதுவும் எப்படியும் நடக்கலாம் என்று நினைப்பது தற்காலிகமானதல்ல.

பள்ளிப்பருவம் என்பது மிகவும் பெறுமதியான – இளம் சமூகம் தங்கள் எதிர்கால வாழ்வின் தகைமைப்பாட்டை நிர்ணயித்து கொள்ளுகின்ற பருவமாகும்.

இந்த பருவத்தை துஷ்பிரயோகம் செய்தவர்கள் வாழ்க்கையில் தோல்வி கண்டுள்ளனர்.

ஆக, மாணவப் பருவத்தில் மற்றவர்களை மதிக்கின்ற, இனிய சொல் பேசுகின்ற பண்பாட்டை பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

எனவே பள்ளிகளில் மாணவர்கள் ஒழுங்கு, கட்டுப்பாட்டை பின்பற்ற முன்வர வேண்டும்.

# இலங்கைக்கு எதிராக சென்னை மாணவர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டம்

(சென்னை)

இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் லயோலா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

ஜெனிவாவில் இல்ங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தால் பயன் ஏதும் இல்லை.

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க சர்வதேச நாடுகள் தலையிட வேண்டும்.

அதேசமயம் இந்த விசாரணையில் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் பங்கேற்கக் கூடாது. இலங்கை மீது இந்தியாபொருளாதாரதடைவிதிக்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுடன் சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் பிரிட்டோ, சதீஷ், மணி, திலீப் உள்ளிட்ட 7 மாணவர்கள் நேற்றுக் காலை கல்லூரி வளாகத்தினுள்ளேயே உண்ணா விரதப் போராட்டத்தினை தொடங்கினர்.

பின்னர் அவர்களுக்கு ஆதரவாக மேலும் இரண்டு மாணவர்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து உண்ணா விரதத்தில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது.

அதேசமயம் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக இதர மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து கல்லூரி வளாகத்தினுள் திரண்டுள்ளதால் அங்கு பெரும் பரபரப்பு காணப்படுகிறது. இந் நிலையில் இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் கல்லூரிக்கு விரைந்து வந்தனர்.

மாணவர்கள் வெளியே வந்துவிடாதவாறு வாயிலுக்கு வெளியே ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். லயோலா கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாக மற்றக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் குதிக்கக் கூடும் என்பதால் மேலும் பரபரப்பு நிலவுகிறது. (எ–11)

# தாய் நாட்டை நேசிக்கும் தலைமுறையை உருவாக்குங்கள்

### *மகளிர் தின செய்தியில் ஜனாதிபதி*

தாய்நாட்டை நேசிக்கும் ஓர் தலைமுறையை உருவாக்க அனைத்து பெண்களும் திடசங்கற்பம் பூண வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில், குடும்பத்தை பாதுகாக்கும் பெண்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என அவர் தெரிவித்தார்.

தாய் நாட்டை நேசிக்கும் ஓர் தலைமுறையை உருவாக்க அனைத்து பெண்களும் திடசங்கற்பம் பூண வேண்டும். பீதி, பயங்கரவாதம் போன்றவற்றினால் அதிகளவு பெண்களே பாதிக்கப்பட்டனர்.

நாட்டில்மீண்டும்இவ்வாறான இருண்ட யுகம் உருவாக இடமளிக்கப்பட மாட்டாது. நாட்டை நேசிக்கும் மக்கள் வாழும் வரையில் பெற்ற வெற்றிகளை மீளத் தோற்கடிக்க முடியாது.

நாட்டின் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும். அனைத்து துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உயர்வடைந்துள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ–2)

# அமரர் கேசவமூர்த்தி ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(மானிப்பாய்)

கருவெம்பனைஇந்து இளைஞர்கழகம் அமரர் சு.கேசவமூர்த்தி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி செவ்வாய்க் கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கூவில் சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டு கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பன்னாலை கணேசன் விளையா ட்டு கழகம் மோதவுள்ளது. பிற்பகல் 4 மணிக்கு அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (அ–3,23)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்களுடைய சுயநலம் என்னைப்பாதிப்பதே இல்லை. ஆனால் இந்த சுயநலமான மையம் இல்லாமலும் என்னுடன் உங்களால் தொடர்புகொள்ளக்கூடிய காலம் வரும். தற்சமயம் சுயநலம் இருக்கிறது. தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் சுயநலத்தைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். என்னால் உங்களை எடை போடவே முடியாது. ஏனெனில் நீங்கள் எதற்கும் பொறுப்பாளி அல்ல. உங்களுக்கு அகம் –Self அதாவது நான் என்ற உணர்வு உள்ளது. அது உன்னைக்காத்துக் கொள்ளவேண்டும். அதற்கான தேவைகள் உள்ளன. அத்தியாவசியங்கள் உள்ளதால் அது தேடுதலில் உள்ளது. அவ்வளவுதான் எல்லாம் மிகச்சீராக நடந்து வருகிறது. அதனால்தான் நான் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன். ஆகனால் அது யாரையும் புண்படுத்தவோ தீங்கு ஏற்படுத்தவோ மட்டும் கூடாது. அவ்வளவுதான்.

# காவலூர் தரிசனம் வெளிவந்துள்ளது

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் காலாண்டுக்கொருமுறை வெளியிடப்படும் பிரதேச சபையின் செய்திகள், தகவல்கள், தரவுகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் காவலூர் தரிசனம் செய்தி மடலின் மூன்றாவது வெளியீடு வெளிவந்துள்ளது.

சமூக கணக்காய்வு முக்கியத்துவம் பற்றிய விளக்கத்தையும், டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வையும், பொது அறிவை வளர்க்கும் வகையிலான வினாவிடைப் போட்டியையும் மேலும் பல விடயங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. (அ)

# தண்டப்பணம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரதுச்சபையில் 2004, 2005, 2006 மற்றும் 2007 இளைப்பாறிய ஊழியர்களது பணிக் கொடை தண்டப்பணக் கொடுப்பனவு தொடர்பாக நீதிவான், நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இ.போ.ச (வ), தலைமைக் காரியாலயத்திற்கு தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கிப் புத்தகத்துடன் தண்டப்பணக் கொடுப்பனவு பெறுவதற்காக தவறாது சமுகம் கொடுக்குமாறு பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார். (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்ல மனிதனாக வாழ்வோமே!



கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக ஒரு கடவுள் உலகிலில்லை.

மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்கே சேவை செய்தவன் ஆகிறான்.


தேவையில்லா விடயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதால் நம் மனசக்தி வீணாகிறது. அமைதியுடன் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.

அச்சத்திற்கு அப்பாற் செல்லுங்கள். அச்சமற்றவராக வாழத் தொடங்குங்கள்.

உண்மை, அன்பு, நேர்மை மூன்றும் ஒருவனுக்கு இருந்துவிட் டால் அவனை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது.

முதலில் நல்ல மனிதனாக வாழப் பழகுங்கள். அதன்பின்பு பொன், பொருள் செல்வம் எல்லாம் உங்களைப் பின் தொடர்ந்து வரும்.

பொறாமை அழிவிற்கு வழிவகுக்கும். துணிச்சல் மனவலிமை, கீழ்ப்படியும் பணிவு இருக்குமிடத்தில் பொறாமை இருப்பதில்லை.



# சங்கக்காரவின் சதத்தின் உதவியுடன் இலங்கை 361/3

காலியில் நேற்று ஆரம்பமான பங்களாதேசுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. உபாதைக ளுக்குள்ளாகி நீண்ட நாட்களுக்குப் பின் களமிறங்கிய சங்கக்கார 142 ஓட்டங்களைப் பெற்று அணியை ஸ்திரமான நிலைக்கு இட்டுச் சென்றார்.

முன்னதாக நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மெத்தியூஸ் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அந்தவகையில் ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன மற்றும் டில்சான் ஆகியோர் களமிறங்கினர். இந்த ஜோடி சிறந்த இணைப்பாட்டமொன்றை வழங்கியது.

23 ஆவது ஓவரில் அணி 114 ஓட்டங்களைப் பெற்றபோது டில்சான் 54 ஓட்டங்களுடன் (63 பந்துகளில் 9 பவுண்டரி உட்பட) ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த சங்ககார களத்திலே நின்ற கருணாரத்னவுடன் இணைந் தார். இருவரும் இணைந்து ஆடிக்கொண்டிருக்கும்போது அணி 181 ஓட்டங் களைப் பெற்றபோது 38 ஆவது ஓவரில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய கருணாரத்ன 61 பந்துகளில் 41 ஓட்டங்களை ( 3 பவுண்டரி, 1 சிக்ஸ்) அணிக்காகப் பெற்றார்.

தொடர்ந்து வந்த திரிமென சங்ககாரவுடன் இணைந்தார். இந்த ஜோடி தமக்குள் 124 ஓட்டங்களைப் பகிர்ந்தபோது 73 ஆவது ஓவரில் சங்கங்கார ஆட்டமிழந்தார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சங்கக்கார 226 பந்துகளில் 142 ஓட்டங்களை ( 16 பவுண்டரி, 3 சிக்ஸ் உட்பட) பெற்றார். அடுத்து வந்த அணித் தலைவர் மெத்தியூஸ் திரிமெனவுடன் ஜோடி சேர்ந்து ஆடிவருகின்றார். களத்திலே திரிமென 74 ஓட்டங்களுடனும் மெத்தி யூஸ் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ள னர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பொண்டிங், ஹசி இல்லாமையால் ஆஸி. ஆட்டம் கண்டுள்ளது

**- அதிரடி வீரர் ஜோனஸ்**

பொண்டிங், மைக் ஹசி ஓய்வு பெற்றதால் அவுஸ்திரேலிய அணி ஆட்டம் கண்டுள்ளது என்று வர்ணித்துள்ளார் தொலைக்காட்சி வர்ணணையாளரும், அவுஸ்திரேலியா அணி முன்னாள் அதிரடி துடுப்பாட் வீரருமானடீன் ஜோனஸ். இது குறித்து அவர் கருத்துத் தெரி விக்கையில்,

பொண்டிங், மைக் ஹசி ஓய்வு பெற்றதால் அவுஸ்திரேலிய அணி பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த இருவரும் இல்லாததால் நடுவரிசை ஆட்டம் கண்டிருப்பது தெளிவாக தெரிகிறது. ஹசி மிகச்சிறந்த வீரர். சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர். அவர் இல்லாததால் அணித் தலைவர் கிளார்க் மிகவும் திணறு கிறார். கிளார்க் களம் வரும்போது மிகவும் சலித்த நிலையில் காணப்படுகிறார்.இதனால் அவர் 4ஆவது வீரராக ஆடுவது நல்லது.

நான் ஏற்கனவே கூறியதுபோல அவுஸ்தி ரேலிய அணி மிகப்பெரிய சுற்றுப் பயண மான இந்தியாவுக்கு வரும்போது தன்னை முழுமையாக தயார்படுத்திக் கொள்ளவில்லை. சொந்த மண்ணில் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான ஒருநாள் தொடரை முடித்த பிறகு இந்தியா வந்துவிட்டது.

ஐதராபாத் டெஸ்டில் அவுஸ்திரேலியா வின் ஆட்டம் உப்புசப்பு இல்லாமல் இருந்தது என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம். என்றார் டீன் ஜோனஸ்.

# காத்திருக்கும் விளம்பர வாய்ப்புக்கள்

'அவுஸ்திரேலிய அணியுடனான முதலாவது, இரண்டா வது டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் வெற்றி, தோனியின் அதிரடி ஆட்டம் ஆகியன தோனியின் விளம்பர மார்க்கெட்டை உயர்த்தியுள்ளது.

தற்போது தோனி 15 விளம்பரங்களில் நடித்து வருகிறார். சராசரியாக ஒவ்வொரு விளம்பரத்திற்கும் ரூ.6 முதல் ரூ.10 கோடி (இந்தியப் பணம்) சம்பளம் பெறுவதாக கூறப்படுகிறது. தோனி நடித்துவரும் சில விளம்பர நிறுவனங்களின் ஒப்பந் தம் ஒரு சில மாதங்களில் முடிவுக்கு வருகிறது. தற்போது தோனி உச்சத்தில் உள்ளதால் புதிய ஒப்பந்த தொகை மேலும் அதிகரிக்கும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவரது விளம்பர வருவாய் மேலும் அதிகரிக்க கூடும் என கூறப்படுகிறது.

# விளையாட்டுத் துளிகள்

- தொடர் தோல்விகளால் துவண்டு வரும் அவுஸ்திரேலிய அணியை, மீட்பதற்காக மீண்டும் சர்வதேச கிரிக்கெட் டுக்கு வரமாட்டேன் என்று சமீபத்தில் ஓய்வுபெற்ற மைக் ஹசி தெரிவித்துள்ளார்.
- மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள மொஹாலி மைதானம், சென்னை, ஹைதராபாத் மைதானங்கள் போன்று அல்லாமல், துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்கள் என இருவருக்கும் சாதக மானதாக இருக்கும் என்று பஞ்சாப் கிரிக் கெட் சங்க செயலர் பண்டோவ் தெரிவித்துள் ளார்.

# இலங்கை தோல்வி




இலங்கை மகளிர் அணிக்கெதிரான சர்வதேச ரி-20 கிரிக்கெட் தொடரை 4 -1 என்ற ஆட்டக்கணக்கில் மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி தன்வசப்படுத்தியுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் 7 ஓட்டங்க ளால் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவு கள் அணி 20 ஓவர்களில் 122 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணிசார்பாக டின்ரா டொட்டின் 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் உதேஷிக்கா பிரபோதினி மற்றும் ஒஷாடி ரண சிங்க ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

123 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 115 ஓட் டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி யடைந்துள்ளது. இலங்கை அணி சார்பாக எஷானி கௌ சல்யா 44 ஓட்டங்களைப் பெற்றதுடன், டிலானி மனோதர ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.


மேற்கிந்திய தீவுகள் அணிசார்பாக சேனல் டலே நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இத்தொடரின் நாயகியாக மேற்கிந்தியத்தீவுகளின் ஸ்டஃபானி டெய்லர் தெரிவானா


# ஓய்வுபெறும் எண்ணம் இல்லை!

அவுஸ்திரேலியாவுடனான ஏனைய டெஸ்ட் போட்டிகளில இருந்து நீக்கப்பட்ட இந்திய அணியின் சேவக் ஓய்வு முடிவை அறிவிப்பாரா? என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலை யில், இது குறித்து சேவாக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இப்போதைக்கு ஓய்வு பெறும் திட்டம் ஏதும் இல்லை. கடுமையாகப் பயிற்சி செய்து அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் என்று சேவாக் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்திய அணி நவம்பர் மாதம் தென்னாபிரிக்கா சென்று டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது குறிப்பிடத்தக்கது

இதுவரை 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8,586 ஓட்டங்கள் (அதிகம் 319, சராசரி 49.34, சதம் 23, அரை சதம் 32) மற்றும் 251 ஒருநாள் போட்டிகளில் 8,273 ஓட்டங்கள் (அதிகம் 219, சராசரி 35.05, சதம் 15, அரை சதம் 38) பெற்றுள்ளார்.





# நியூசிலாந்து ஆதிக்கம்

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் 3ஆம் நாள் ஆட்ட முடிவில் நியூஸிலாந்து அணி தொடர்ந்தும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

விக்கெட் இழப்பின்றி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, நேற்றைய 3 நாள் முடிவடையும்போது 7 விக்கெட்டுக்களை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக ஹேமிஸ் றதர்போர்ட் 217 பந்துகளில் 22 பவுண்டரி, 3 சிக்ஸ் உட்பட 171 ஓட்டங்களையும் பீற்றர் ஃபுல்ற்றன் 169 பந்துகளில் 8 பவுண்டரி அடங்கலாக 55 ஓட்டங்களையும் பிரென்டன் மக்கலம் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 4 விக்கெட்டுக்களையும் ஸ்ருவேர்ட் ப்ரோட் 2 விக்கெட்டுக்களையும் மொன்டி பனசர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்படி, 3 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் நியூஸிலாந்து அணி 235 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

டுனேடினில் இடம்பெறும் இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த இங்கிலாந்து அணி 167 ஓட்டங்க ளுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

# சந்தர்ப்பம் கிடைத்தால் வீணடிக்கமாட்டேன்

இந்திய ஒருநாள் அணியின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர் சுரேஷ்ரெய்னாவுக்கு டெஸ்ட் அணியில் நிரந்தர இடம் கிடைக்க வில்லை. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலும் அவருக்கு வாய்ப்பு கிடைக்க வில்லை. இந்த நிலையில் சுரேஷ்ரெய்னா அளித்துள்ள ஒரு பேட்டியில், 'எனது துடுப்பாட் டத்தில் கவனம் செலுத்தி வருகிறேன். எனக்கு டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்பு மீண்டும் கிடைத்தால் அதனை வீணடிக்கா மல் நல்ல முறையில் பயன்படுத்தி எனது இடத்தை நிரந்தரமாக உறுதி செய்வேன். அடுத்த வாய்ப்புக்காக காத்திருக்கிறேன். எனக்கு டெஸ்டில் கிடைக்க வேண்டிய இடத்தை மற்ற வர்கள் 'எடுத்து கொண்டுவிட்டதாக நான் நினைக்கவில்லை. அணியின் வெற்றிப் பயணம் தொடரும் வரை எனக்கு மகிழ்ச்சி தான்' என்று தெரிவித்துள்ளார்.

## உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட பெரு விளையாட்டுகள்

உடுவில் பிரதேச பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கபடி, கரப்பந்து போன்ற பெரு விளையாட்டுக்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் நடைபெறவுள்ளது.


இதே போல் கபடிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு இதே மைதானத்தில் நடைபெறும். எனவே இப்போட்டியில் பங்குபற்றும் இளைஞர் கழகங்கள் 8.30 மணிக்கு முன்னராக மைதானத்திற்கு வருமாறு உடுவில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

## தெல்லிப்பழை பிரதேச பெரு விளையாட்டுகள்

தெல்லிப்பழை பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதே போன்று ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு இவ்மைதானத்தில் நடைபெறும். எனவே இப்போட்டியில் பங்குபற்றும் இளைஞர் கழகங்கள் 8.30 மணிக்கு முன்னராக மைதானத்திற்கு வருமாறு தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார்.





ஸ்ரீஅம்மா பகவானின் 64ஆவது ஜனன தின வழிபாட்டு நிகழ்வு சுழிபுரத்தில் உள்ள சற்சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அம்மா பகவானின் ஜனனதின நிகழ்வின் போது அவரின் திருவடியில் இருந்து தேன் சொரிந்த அற்புதமும் இடம்பெற்றது.

## தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டி

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கான வலைப்பந்தாட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது. 3 பிரிவுகளிலும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியால அணி சம்பியன் ஆக தெரிவு செய்யப்பட்டது. சாவகச்சேரி ட்ரிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய 15,17,19 வயது பிரிவு அணிகள் சம்பியனாகின.

15 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தை வரணி மத்திய மகாவித்தியாலயமும்; மூன்றாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

17, 19 வயது பிரிவில் இரண்டாமிடத்தை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. 17 வயதுப் பிரிவில் 3-ம் இடத்தை வரணி மத்தியமகா வித்தியாலயமும் 19வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தை சாவகச்சேரி மகளிர் அணியும் பெற்றுக்கொண்டன.

## இசைப்பிரியாவின்...

பகுதியில் வடக்கில் பெண்களுக்கு எதிராக மிக மோசமான வன்கொடுமைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு நாட்டில் தொடர்ந்து ஜனநாயகத்திற்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் போது மனித உரிமைகள் தொடர்பிலான ஐ.நா சாசனங்கள் இலங்கையில் பாதுகாக்கப்படுவதாக எவ்வாறு கருத முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ஏ-1)

## இந்தியப் பிரதம...

இந்திய நிறைவேற்றுப்பணிப்பாளர் அனந்த பத்மநாபன் இந்த மகஜரை ஒப்படைத்துள்ளார்.

மத்திய அமைச்சர் வீ.நாராயணசாமியின் ஊடாக இந்த மகஜர் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத சூழ்நிலைக்கு முடிவு காணப்பட வேண்டுமென அனந்த பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதனை இந்தியா வலியுறுத்த வேண்டுமென மகஜரில் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு தலைமையிலான ஓர் பொறிமுறைமையின் ஊடாக இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும், பயங்கரவாதத்தடைச்சட்டம் ரத்து செய்யப்பட வேண்டுமெனவும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஏ-1)

## 84 கோடி பணமும்...

இவர்கள் வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறியே இத்தொகை பணத்தினை வசூலித்துள்ளனர்.


பின்னர் தாம் வசித்து வந்த இடமான சண்டிலிப்பாயினை விட்டு தலைமறைவாகி புத்தளம் பிரதேசத்தில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் பணம் மற்றும் நகைகளினை கொடுத்து ஏமாந்தவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்கள் இருவருடைய புகைப்படங்கள் பதித்த துண்டுப் பிரசுரங்கள் தலைமறைவு எனத் தலைப்பிடப்பட்டு யாழின் சனநடமாட்டமுள்ள பிரதேசங்களிலும் ஒட்டப்பட்டன.

இந்நிலையில் புத்தளம் பொலிஸார் இவர்கள் இருவரையும் கைது செய்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (ஏ-4)

# கொழும்பு இந்துக் கல்லூரி வெற்றி



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் கொழும்பு பழைய மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் – கொழும்பு இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான வி.எச் சவால் கிண்ணத்திற்கான போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருந்தது.

கொழும்பு இந்துக் கல்லூரி இன் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி திறமையாகப் போட்டியிட்டிருந்த போதிலும், கொழும்பு இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி 38.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள, இந்துக் கல்லூரி அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்த்திருந்த நிலையில் இறுதி நேரத்தில் அந்த அணி விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் 8-வது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 29 ஓட்டங்கள் பகிரப்பட்டதன் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இலங்கையின் உலகக் கிண்ண நாயகன் அர்ஜுன ரணதுங்க கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் தலைவர்...

தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்துள்ளார். (ஏ-1)

# வலம்புரி செய்தியாளர் மீது...

தாக்குதலிலிருந்து ஒருவாறாக சுதாகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பித்த செய்தியாளர் சாளின், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் சென்று கொண்டிருந்தபோது முன்பு தாக்குதல் மேற்கொண்ட நபர்களுடன் சுமார் ஆறு பேர் கொண்ட குழுவினர் இடைமறித்துள்ளனர்.

இதன்போது அந்த இடத்தில் துவிச்சக்கர வண்டியை போட்டுவிட்டு தப்பித்து ஓடி நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவரும் இரண்டு துவிச்சக்கர வண்டியில் நான்கு பேருமாக மொத்தம் ஆறு பேர் அவரைக் கலைத்து இடைமறித்து மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

இதன்போது செய்தியாளர் சாளினை கீழே தள்ளி விழுத்தி வயிற்றுப் பகுதியில் உதைத்ததோடு முகத்திலும் குத்தியுள்ளனர்.

இதுதவிர அவ்வீதியில் உள்ள வீடொன்றில் கட்டிடம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வயோதிபரிடம் மண்வெட்டியை பறித்து தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட போது எமது செய்தியாளர் கத்திக்குளறி உயிரைக் காப்பாற்ற முற்பட்டுள்ளார்.

பின்னர் தாக்குதல் மேற்கொண்டவர்கள் அங்கிருந்து சென்ற பின் வீதியில் துடித்துக் கொண்டிருந்த செய்தியாளர் சாளினை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் மாணவன் ஒருவன் மீட்டு வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் கொண்டு வந்து சேர்த்தார்.

இதனையடுத்து அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் ஐந்துக்கும் மேற்பட்ட கட்டங்களாக விசாரணை செய்ததோடு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைகளின்போது சாளின் சம்பவம் தொடர்பில் விபரிக்கையில்,

தன்னைத் தாக்கியவர்கள் யார் என்பது தெரியாது எனவும், ஒருவரை முன்பு பார்த்த ஞாபகம் உள்ளதாகவும் கூறினார்.

தாக்குதல் மேற்கொண்டோர் பொலிஸில் முறைப்பாடு செய்யவுள்ளாயா? எனக் கேள்வி எழுப்பியிருந்தனர் எனவும் இதன்போது தான் பொலிஸில் முறைப்பாடு செய்ய மாட்டேன். நான் வலம்புரிப் பத்திரிகையில் செய்தியாளராகவுள்ளேன் எனக் கூறி தனது அலுவலக அடையாள அட்டையினைக் காட்டியதாகவும் கூறினார்.

இதன்போது தெரியாத ஆறு பேர் கொண்ட குழுவினைச் சேர்ந்த நபர் ஒருவர் நானும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்தவன் எனக் கூறி தனது மோட்டார் சைக்கிளில் சாளினை இழுத்து ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது, தான் அவர்களிடமிருந்து தப்பித்ததாகவும் மேற்குறிப்பிடப்பட்ட மாணவன் தன்னை மீட்டு அலுவலகத்தில் சேர்த்தார் எனவும் குறிப்பிட்டார். (ஏ-6,1)

# டிப்பர் வாகனம் மோதி குடும்பப் பெண் பலி

வீதியைக் கடக்க முற்பட்டபோது டிப்பர் வாகனம் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். இச்சம்பவம் நேற்று காலை 10 மணிளவில் மீசாலை சந்தியருகே இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலை பங்களா வீதி சேர்ந்த சுந்த சாமி பரமேஸ்வரி (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கிளினிக்குக்காக செல்ல முற்பட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் நுணாவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.(எ-85)

மாற்ற முடியாதது எதுவுமே இல்லை
மாற்றம் தேவையானது.
எங்கள் மாற்றம் உங்களை வியக்க வைக்கும்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.



கருமை நிற நீக்கம் (மாநிறத்தில் இருந்அழகிய சிவப்பழகு) கருவளையம் உதட்டுக்கருமை,கழுத்துக்கருமை,நீக்கம் மூக்கோரங்களிலிலுள்ள ✱ கொழுப்புப்படிவுகள் போன்றவற்றிற்கு நிரந்தரதீர்க்கான ஆயுர்வேத சிகிச்சைகள். **ஆயுர்வேத ஓயில்மசாஜ்** (முகம்,கழுத்து) முடிசம்பந்தமான அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகள். உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல் (இடுப்பு,கை,தொடை) போன்ற தசை குறைப்புக்கள்) வரையான சிகிச்சைகள்.

**எமது முகவரி:**
இல.262, "சானியா கேபல் கெயர்"
நாயன்மார்கட்டுட்டு ஆயுர்வேத வைத்தியசாலை,
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



முற்பதிவு அவசியம்: 0777351954

# அமெரிக்க தீர்மான வரைபு...

அமெரிக்காவின் வரைபுத் தீர்மானம் இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும், தேசிய நடவடிக்கைத்திட்டமும், சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக எழுந்த பாரிய குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கவில்லை என்று கூறுகிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் செய்திகள், மக்கள் காணாமல் போகடிக்கப்படுவது, மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாவது, நீதித்துறையின் சுதந்திரத்திற்கு எழும் அச்சுறுத்தல்கள் ஆகியவை குறித்து இந்தத் தீர்மானம் கவலை வெளியிடுகிறது.

மேலும் இலங்கை அரசு, அரசியல் அதிகாரப் பரவலைச் செய்யத் தவறியது உட்பட்ட வெளிப்படையாகக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் அந்த தீர்மான வரைபு கூறுகிறது.

மேலும் ஐ.நா மன்ற மனித உரிமைகள் ஆணையர் நவிபிள்ளை இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும் மேம்படுத்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி தருவது குறித்து வெளியிட்ட அறிக்கையை வரவேற்கும் இந்த தீர்மான வரைபு, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும், மனிதநேய சட்டத்தையும் மீறிய செயல்கள் குறித்து ஒரு நம்பகமான, சுயாதீனமான சர்வதேச விசாரணையைக் கோரி ஆணையாளர் விடுத்த அழைப்பையும் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது.

இந்த ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பரிந்துரைகளை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும் என்றும் அந்த தீர்மான வரைபு கோருகிறது.

- இலங்கை அரசு ஐ.நா மன்ற நீதிபதிகள் சுதந்திரத்திற்கான சிறப்புத் தூதுவர் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போன்ற குழுக்கள் இலங்கைக்கு வந்து செல்ல தங்கு தடையற்ற அனுமதி தருமாறும் இந்த தீர்மான வரைபு கோருகின்றது.

இந்தத் தீர்மான வரைபு பின்னர் வாக்கெடுப்புக்கு எடுத்து கொள்ளப்படக்கூடும்.

ஒட்டு மொத்தில் இது ஒரு பலமான தீர்மானம். கடந்த வருடத்தில் இருந்து இது வாதங்களை மேலும் முன்னெடுத்துச் செல்கிறது என்று அம்னஸ்டி இண்டர்நஷனல் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.(எ-11)

## காணி விற்பனைக்கு

பூநகரி-மன்னார் வீதியில் இருந்து பள்ளிகுடா வீதிக்கு திரும்பும் இடத்தில் உறுதியுடன் உள்ள 01 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0713011842 (2097)

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
உங்களது கணினியில் ஏற்படும்
Software/Hardware/Virus
பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்.
மலிவு விலையில்
Core 2 duo, Dual Core, LGA HT
Branded Computers ✆ 0779689043
478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers
எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக

Personal Group
Auto CAD
Lecturer By: K.N.Mugunthan(B.Sc(Eng))
Cert.in Auto CAD Software University of Colombo - Open University of Sri-Lanka
Faculty of Engineering- University of Peratheniya 0775116320-071 8617972

## Security Guard

**டோகா/கட்டார்/ டுபாய் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு**

- ✓ ஆண், பெண்
- ✓ வயது 18-45
- ✓ 5 நாட்கள் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
- ✓ City & Guilds இனால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்
- ✓ மாதாந்த சம்பளம் 65,000/- + மேலதிக நேரம்

*In Joint Venture With*

தொடர்புகளுக்கு:
*No: 77,*
*Clock Tower Road,*
*Jaffna. 021 730 6000*

TRAINGUARD
iCS Study Overseas

## LEYDEN CONSTRUCTIONS CONSORTIUM (Pvt) Ltd.

472, Main Street, Jaffna.









யாழ் மண்ணில் நம்பிக்கையான உறுதியான பாரம்பரிய கட்டட நிபுணத்துவம் மிக்க பொறியியலாளர்களின் மேற்பார்வையில் உங்கள் வீடுகள், கடைகள்,கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.

We Specialized in....

1) Accomplish jobs always within the time frame.
2) Full time supervision and security facilities for every work sites.
3) Skilled and experience working teams.
4) Sophisticated machineries for technical jobs.
5) Heavy machineries for heavy construction.
6) Geotechnical Engineering facilities for foundation work.
7) Structural Engineering designs to reduce cost and strengthen the building.
8) Pantry cupboards for modern kitchen.
9) Hot & Cold water plumbing and dry bathrooms.
10) Television, Telephone and ring circuit wiring (to reduce the electricity cost).
11) Experience tillers and painters to give hotel finish.
12) All bill payments are done on measure and pay basis.
13) Loans facilities shall be arranged with banks at your convenience.

For Contact:
472, Main Street, Jaffna.
T. Phone; 0773151654, 0777320799
E mail; gana@leyden.lk

## வெளிநாட்டு பட்டக்கல்வி & தொழில்வாய்ப்பு

**பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, மலேசியா**

- ➢ பல்கலைக்கழக பட்டக்கல்வி வாய்ப்புக்கள்
- ➢ 50,000/= வருமானத்துடனான தொழிற்கல்வி
- ➢ 100,000/=உடனான தொழில்வாய்ப்புக்கள்

| பட்டக்கல்வி வாய்ப்புக்கள் | தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு |
|---|---|
| மார்ச் 14 வியாழன் 10 மணி<br>யாழ்.ஞானம்ஸ் ஹொட்டேல்<br>(A/L 3C யுடன் 3 வருடத்தில் பட்டக்கல்வி<br>O/L 5Cயுடன் 4 வருடத்தில் பட்டக்கல்வி) | மார்ச் 16 சனி 10 மணி<br>வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்<br>மார்ச் 17 ஞாயிறு 10 மணி<br>யாழ்.ஞானம்ஸ் ஹொட்டேல்<br>(O/L தேர்ச்சி இல்லாதவர்களும் இணையலாம்) |

பல்கலைக்கழக பிரதிநிதிகள் Kumara Raj மற்றும் Ryan Kok ஆகியோரை நேரில் சந்தித்து அனுமதி பெற வாருங்கள்

**முற்பதிவுகளுக்கு : 077 36 16 798**

பல்கலைக்கழக அனுமதி முதல் பட்டம், தொழில் பெறும் வரையில் கூடவே இருந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

சிகரம் SIKARAM
MEDIA & EDUCATION
கல்வி - தொழில் வழிகாட்டி

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 300 80 60,
நேமு: 0773 616 798
Email: edusikaram@gmail.com
www.sikaram.lk

## நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு





பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறைவீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)
0773818799

PAVING STONES

பல்வேறு வழிவமைப்புக்களைக் கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள காட்சியறைகளில் பார்வை இடலாம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.